முட்களுடன் முட்களில்லாமல்
CITIZEN சிற்றிசன்
கைக்கடிகாரங்கள்
சுவர், மேசை
ம ணி க் கூ டு க ள்
தாராளமாகக் கிடைக்கும்
நேர்டிஇறக்குமதியாளர்
இ.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் போன் 284 -

★ பக்கங்கள் 8 விலை சதம் 40

# ஈழநாடு
The EELANADU

மலர்: 20 புரட்டாதி 28 ஜுல்ஹஜ்: 11 இதழ்: 215
யாழ்ப் பாணம் சனிக்கிழமை 14-10-78

உழைக்கும் வர்க்கத்தின்
உற்ற நண்பன்
ஈஸ்டன் சைக்கிள்
EASTERN CYCLE
ஆடவர், மகளிர் மாடல்கள்
தாராள்மாகக் கிடைக்கும்
இ.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

NATIONAL LIBRARY OF SRI LANKA RECEIVED 1978-10-16 PERIODICALS SECTION

# 'தமிழ் ஈழ' இலட்சியத்திற்கு பாராளுமன்றம் ஒரு தளம்!

## தமிழர் கூட்டணி சத்தியப்பிரமாணம் செய்ததில் தவறில்லை

### சன்சோனி கமிஷன்முன் இரா. சம்பந்தன்

(திருகோணமலை)

தமிழர் விடுதலைக் கூட்டணி தனது இலட்சியமான தமிழ் ஈழத்தை அடைய இன்றைய பாராளுமன்றத்தை ஒரு தளமாகக் கருதிப் போராடிவருகிறது. எனவே புதிய அரசியல் அமைப்புக்கு விசுவாசம் தெரிவித்து பாராளுமன்றத்தில் சத்தியப்பிரமாணம் செய்ததில் தவறில்லை.

இவ்வாறு திருகோணமலை எம். பி. திரு. இரா. சம்பந்தன் சன்சோனிக் கமிஷன் முன்னிலையில் சாட்சிய மளிக்கையில் கூறினார்.

சிங்கள மகாஜன பெரமுனையின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. விஜயதுங்கா குறுக்குவிசாரணை செய்தபோது திரு. சம்பந்தன் மேலும் கூறியதாவது.

**தேவநாயகத்துக்கு பேச அருகதையில்லை**

நீதி அமைச்சர் திரு. கே. டபிள்யூ. தேவநாயகம் கல்குடா தொகுதியில் மிகவும் குறைந்த பெரும்பான்மை வாக்குகளாலேயே வெற்றி பெற்றார். எனவே அவருக்கு தமிழ்மக்கள் பற்றிப் பேச அருகதையில்லை.

சட்: திரு. தொண்டமான்?

சம்: தொண்டமான் இந்தியத் தமிழர்கள் தலைவர்.

சட்: தமிழ் ஈழத்தின் தலைநகர் திருகோணமலையா?

(8-ம் பக்கம் பார்க்க)

---

## இந்திராவை எதிர்த்து 46 பேர் போட்டி!

பெங்களூர், ஆக. 13

தென்கர் நாடக மாநில சிக்மகளூர் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடுவதற்காக 47 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

வேட்பு மனுக்களை தாக்கல் செய்வதற்கான இறுதித் தினமான இன்று மட்டும் 27 பேர் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்தனர்.

வேட்பு மனுக்களை வாபஸ் பெறும் இறுதித் தினம் இம்மாதம் 16-ந் திகதியாகும்.

இத்தொகுதியில் இந்திரா காங்கிரஸ் சார்பில் திருமதி இந்திராகாந்தியும் ஜனதாக் கட்சி சார்பில் திரு. வீரேந்திர பட்டீலும் போட்டியிடுகின்றனர். (இ)

---

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

லொத்தர்சபை தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் இழுக்கப்பட்ட 684-வது இலக்க சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
30 R 0878
ரூபா 100,000

இரண்டாவது பரிசு
04 D 0680
ரூபா 40,000

மூன்றாவது பரிசு
16 G 0986
ரூபா 10,000

தலா ரூபா 1,425 பெறும் 100 ஆறுதல் பரிசுகள் வருமாறு:

| | |
|---|---|
| 10 A 0392 | 18 A 0714 |
| 23 A 0452 | 23 A 0553 |
| 02 B 0784 | 07 B 0200 |
| 11 B 0558 | 11 B 0743 |
| 24 B 0988 | 27 B 0634 |
| 16 C 0704 | 21 C 0454 |
| 01 D 0773 | 04 D 0322 |
| 04 D 0355 | 06 D 0754 |

[8-ம் பக்கம் பாரக்க]

---

ஜனாதிபதி கமிஷனுக்கு எதிரான

## சிறிமாவின் அப்பீல் மனு: நீதியரசர்கள் நியமனம்

(கொழும்பு)

கடந்த ஆட்சிக் காலத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல், அதிகார துஷ்பிரயோகம் ஆகியன பற்றி விசாரித்துவரும் ஜனாதிபதிக் கமிஷனுக்கு எதிராகத் தடையுத்தரவு கோரி, முன்னாள் பிரதமர் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா தாக்கல் செய்த மேன்முறையீட்டு மனுவை விசாரிக்கும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்களின் பெயர்கள் நேற்று அறிவிக்கப்பட்டது.

நீதியரசர்கள் திருவாளர்கள் டபிள்யூ. விமலரத்ன, ஏ. வைத்திலிங்கம், கொலின் தோமே ஆகியோரே மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

திருமதி பண்டாரநாயக்காவின் மனுவை இம்மூவரும், இம்மாதம் 16ந் திகதி முதல் மூன்று தினங்கள் விசாரிப்பர்.

ஜனாதிபதி கமிஷன் சார்பில் சட்ட மா அதிபர் திரு. சிவா பசுபதி இந்நீதிமன்றத்தின் முன் ஆஜராவார். (ம-இ)

---

## இளைஞர் பேரவை அவசரமாகக் கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

நீண்டகால இடைவேளைக்குப் பின் தமிழ இளைஞர் பேரவை மத்திய செயற்குழு எதிர் வரும் 19-ந் திகதி மாலை தமிழர்விடுதலைக் கூட்டணி பணிமனையில் அவசரமாகக் கூடுகிறது.

இன்றைய அரசியல் நிலை பற்றி முக்கிய தீர்மானங்கள் எடுக்கவிருப்பதால் அவசரமாகக் கலந்துகொள்ளுமாறு செயற்குழு உறுப்பினர்களுக்கு தந்தி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

செயற்குழுக் கூட்டம் இளைஞர்பேரவை அமைப்புச் செயலாளர் திரு த. சந்ததியார் தலைமையில் நடைபெறும். (கெ-இ)

---

## யாழ். ஆஸ்பத்திரி தாதிகள் மோதல்! ஒருவர் வார்ட்டில் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆஸ்பத்திரித் தாதிகள் விடுதியில் இரு தாதிகள் மோதிக்கொண்டதையடுத்து, ஒருவர் ஆஸ்பத்திரி வார்ட்டில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

நேற்று முன்தினமிரவு இரு தாதிகளுக்கிடையில் புத்தகம், குடை ஆகியவற்றின் பாவனை குறித்து வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், அடுத்து இருவரும் மோதிக்கொண்டபோது ஒருவரின் பற்களில் காயமேற்பட்டதாகவும் விசாரணையின்போது தெரியவந்தது. இருவரும் செல்விகளாவர்.

யாழ் குற்றத் தடுப்புப் பிரிவுப் பொறுப்பதிகாரி திரு. சுமண ... விசாரணை செய்தார்.

---

## 2-வது ஏர்பூட்டு விழா அனுராதபுரத்தில் இன்று

[கொழும்பு]

அனுராதபுரம் இசுறுமுனியவில் இன்று காலை நடைபெறும் 2-வது ஏர்பூட்டு விழா அங்குள்ள ஐயனார், பிள்ளையார் ஆலயங்களிலும் இடம்பெறும் விசேட பூஜையை அடுத்து சுபவேளையான காலை 10-37க்கு ஆரம்பமாகும்.

தமிழ், சிங்கள, முஸ்லிம் விவசாயிகளுடன் இவ்விழாவில் ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் ஏர்பிடித்து உழுவார். மற்றும் அமைச்சர்களும், எம். பிக்களும் கலந்துகொள்ளும் இவ்விழாவில் ஏராளமான விவசாயிகளும் கலந்துகொள்வர்.

இலங்கையின் முதலாவது இராஜதானியான பண்டுவஸ்நுவரவில் முதலாவது ஏர்பூட்டுவிழா நடைபெற்றது தெரிந்ததே.

இரண்டாவது இராஜதானியான அனுராதபுரத்தில் தேவநம்பியதீசனால் இலங்கையில் முதன்முதலில் கட்டப்பட்ட இசுறுமுனிய விகாரைக்கு முன்

[8-ம் பக்கம் பார்க்க]

---

## யாழ். ரயில் நிலையத்தில் மாணவியைக் கடத்த முயற்சி

### இரு இளைஞர்கள் கைது!

(யாழ்ப்பாணம்)

யாழ். புகையிரத நிலையத்தில் குடிபோதையில் நின்றதாகக் கருதப்படும் இரு இளைஞர்கள், பாடசாலை மாணவியொருவரை கடத்தமுற்பட்டபோது பொதுமக்களால் தாக்கப்பட்டு பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்

இச்சம்பவம்பற்றி மேலும் தெரியவந்துள்ளதாவது;

[8ம் பக்கம் பார்க்க]

# வரி விளம்பரம்

## பயிற்சி

மூன்று மாத மின்னியல் டிப்ளோமா ஆரம்பமாகவுள்ளது. விபரங்கட்கு 16-10-78க்கு முன் தொடர்பு கொள்ளவும். அதிபர், இன்ஸ்ரிரியூட் ஒவ் என்ஜினியரிங் ரெக்னோலொஜி, 11/B, மொடீசாக் கட்டிடம், யாழ்ப்பாணம். 0543

## தேவை

யாழ்ப்பாணம் மாநகரசபை எல்லைக்குள் ஒரு வீடும் நாவற்குளியில் வீடுகட்ட காணியும் தேவை. வே. நடராசா, சட்டத்தரணி, நெடுங்குளம்வீதி, யாழ்ப்பாணம். 0553

அலுவலக வேலை ஆட்கள் ஆங்கில அறிவுடன் 25 வயதிற்குட்பட்டவர்கள் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும், த. பெ. எண். 83, யாழ்ப்பாணம். 0569

## விற்பனைக்கு

வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் முன்னால் அமைக்கப்பட்டுள்ள மில்க்வைற் விளம்பர விற்பனைக் காட்சிச்சாலையில் வருகின்ற சனி, ஞாயிறு (14, 15, திகதிகளில்) சகாய விற்பனை நடைபெறும். மில்க்வைற் தயாரிப்புக்களை வாங்கும் அன்பர்களுக்கு அழகிய பொலித்தீன்பையும் மேலுறைகளுக்கான அன்பளிப்புக்களும் வழங்கப்படும். மில்க்வைற், யாழ்ப்பாணம். 0568

நல்ல நிலையில் உள்ள Underwood Typewriter விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும். வ. செல்வராசா, மடத்தடி, சாவகச்சேரி. 0567

நெஷனல் TV, 12 அலைவரிசைகள் கொண்டது. றேடியோ, கசட்டுடன் சேர்ந்தது இராமுப்பிள்ளை, 12/4, மணல்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். 0571

## ஏல விற்பனை

18-10-78 புதன்கிழமை காலை 10-00 மணிக்கு மந்திகை அரசினர் வைத்திய சாலைக்கு எதிரேயுள்ள புலோலி ப. நோ. கூ. சங்கத்தின் மருந்துச்சாலைக் கட்டிடத்தில் 4000 வெற்றுச் சாக்குகள் வரை பகிரங்க ஏலத்தில் விற்பனையாகவுள்ளன.

பொதுமுகாமையாளர்.
புலோலி ப. நோ. கூ. சங்கம்,
பருத்தித்துறை.
10-10-78. 0556

## ஆண்டுக்கூட்டமும் பாராட்டும்

(யாழ்ப்பாணம்)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க யாழ் கிளையின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று பிற்பகல் யாழ். கொட்டடி நமசிவாய வித்தியாலய மண்டபத்தில் திரு. இரா. செல்வராசா தலைமையில் நடைபெறவிருக்கிறது.

மேற்படி ஆசிரிய சங்கப் பொதுச் செயலாளர் திரு. ந. பாலசுப்பிரமணியம் சட்டத்தரணியானமைக்காக இக்கூட்டத்தில் பாராட்டப்பட உள்ளார். இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக யாழ். வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். மகேஸ்வர ஐயர் கலந்து கொள்வார். (அ)

## அறிவித்தல்

(1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, பிரிவிடற் சட்டம்) பிரிவு 12 (2)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

சிவகுரு பேரம்பலம், இல. 556 கே. கே. எஸ். றேட்டு, யாழ்ப்பாணம்.

வழக்காளி

வழக்கு இல: பி/56

எதிர்

1. சிவகுரு நந்தகுமார், இவரின் பாதுகாவலர்,
2. சிவகுரு கைம்பெண் இராசமணி, இல: 556, கே. கே. எஸ். றேட்டு, யாழ்ப்பாணம்.
3. சபாபதி மயில்வாகனம், 556/1 மேற்படி
4. சபாபதி இராசதுரை மனு 13 வர்.

எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள வண்ணார்பண்ணை வடகிழக்கு என்னும் கிராமத்தில் அமைந்துள்ள வண்ணான்வளவு நீ. 3 குளி 10 வீடும் கிணறும் பயிர்வகைகளும் என அழைக்கப்படும் காணியை பிரிவிடற்காக 1977 ஆம் ஆண்டின் 21ம் இலக்க, பிரிவிடற் சட்டத்தின்கீழ் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் பி. 56 ஆம் இலக்க வழக்குத் தொடரப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்படி வழக்கில் சம்பந்தப்பட்ட காணியில் உள்ள எத்தகையதுமான ஏதேனும் உரிமைக்கு, பங்குக்கு அல்லது அக்கறைக்கு அது, ஏலவே உரித்தாக்கப்பட்ட ஒன்றாயினுஞ் சரி எதிர் காலத்தில் வந்துறுகின்ற ஒன்றாயினும் சரி அத்துடன் அது ஈடு, குத்தகை, ஒற்றி, வசதியுரிமை, நம்பிக்கைப் பொறுப்பு அல்லது சிவிய உரித்து என்ற வகையிலாயினுஞ்சரி வேறு வகையிலாயினுஞ் சரி, அல்லது அக்காணியில் உள்ள எவையேனும் கட்டடங்களுக்கு அல்லது பயிர்களுக்கு அல்லது அத்தகைய காணிக்குச் செய்யப்பட்ட அல்லது கொடுக்கப்பட்ட ஏதேனும் சீர்திருத்தத்துக்கு உரித்துடையவர்களெனக் கோருகின்றவர்களும் கட்சிக்காரராகச் சேர்த்துக் கொள்ளப்பட விரும்புகின்றவர்களுமான எல்லா ஆட்களும், அதற்கான பிரேரணை மூலம், விண்ணப்பிக்க வேண்டுமென்றும் சொல்லப்பட்ட 1977 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்கப் பிரிவிடற் சட்டத்தின் 19 ஆம் பிரிவினது ஏற்பாடுகளுக்கிணங்க 1978 ஆம் ஆண்டு மார்கழி மாதம் 6 ஆம் நாளன்று அல்லது அதன் முன்னர் தமது கோரிக்கைக் கூற்றுக்களைச் சமர்ப்பிக்க வேண்டுமென்றும் முகவரியைப் பதிவு செய்ய வேண்டுமென்றும் இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

கையொப்பம்
பொ. பாக்கியநாதன்,
பதிவாளர்.

1978 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 4 ஆம் நாள்.

நீதிமன்றக் கட்டளைப்படி,
வரைவு;
இ. சிவசுப்பிரமணியம்.
வழ. ச/த. 0570

## கி. சுயராச்சிய இயக்க பயிற்சி முகாம்

(கிளிநொச்சி)

கிராம சுயராச்சிய இயக்க ஊழியர் பயிற்சிமுகாம் ஒன்று உருத்திரபுரம் காந்திய சேவா சங்கத்தில் கடந்த ஒரு வார காலமாக நடைபெற்றது.

இப்பயிற்சியில் 12 கிராமத்திலிருந்து ஊழியர்கள் கலந்து கொண்டனர். இப்பயிற்சி முகாமில் விவசாயம், கட்டிடம், புள்ளிவிபரம், கால்நடை வளர்ப்புப்போன்ற பல விஷயங்களில் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி முகாமில் பலர் கலந்துகொண்டு விரிவுரை வழங்கினார்கள்.

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்.

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்ற அருணசலம் சச்சிதானந்த முதலி என்பவரின் மரணசாதன சொத்தின் விடயத்தில்,

— மரணமெய்தியவர்

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த சச்சிதானந்த முதலி கைம்பெண் பகவதி அம்மா.

— மனுதாரர்

மரணசாதன நியாயாதிக்கம்: இல. 3359

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரண சாதனத்தை எண்பிப்பதற்காக / மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு ஐப்பசி மாதம் 28-ஆந் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றானதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்

வரைவு:
இ. கமலநாதன்
மனுதாரின் சட்டத்தரணி.

1978-ஆம் ஆண்டு புரட்டாதி மாதம் 22-ஆந் நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 0559

## அறிவித்தல்

### மின்சாரத் தடை

இலங்கை மின்சார சபையினரால் சில அத்தியாவசிய திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட இருப்பதால், 15-10-1978ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8-00 மணியிலிருந்து மாலை 5-00 மணி வரையும் 1. கன்னாதிட்டி, 2 மனோகரா, 3. ஐந்து முச்சந்தி ஆகிய உப மின்நிலையங்களிலிருந்து மின் விநியோகம் பெறும் பாவனையாளர்களுக்கு மின்சாரம் தடைப்படும் என்பது முன்கூட்டியே இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

க. சிவஞானம்,
ஆணையாளர்,
யாழ். மாநகராட்சிமன்றம்.

மாநகராட்சிமன்ற அலுவலகம்
யாழ்ப்பாணம்,
12-10-1978. 0568

## பஹாய் இயக்க கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மயிலணி வடக்கு ஜனசக்தி சனசமூகநிலையத்தில் திரு. ஆ. சொர்ணலிங்கம் தலைமையில் பஹாய் இயக்கம் பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் அவுஸ்திரேலியா நாட்டைச் சேர்ந்த திரு. இயன் பெயிலி என்பவர் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார். அவர் இக்கருத்தரங்கில் உரையாற்றும் போது இன்று உலகில் வாழும் மக்கள் அனைவரும் சமாதான வாழ்வை மேற்கொள்ள வேண்டும் என்றும் மக்கள் ஆத்மீக நெறியில் நின்று ஒழுக வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

இக்கருத்தரங்கில் முன்னாள் உணவுக்கட்டுப்பாட்டதிகாரி கே. சிவப்பிரகாசம் திரு. க. செல்வநாயகம் ஆகியோர் உரையாற்றினர். (ந)

# "பழையகடனில் 20 சதவீதம் வழங்கினாலே மீண்டும்கடன்"

(யாழ்ப்பாணம்)

கடந்த 77/78ம் ஆண்டுக் காலவிவசாயக்கடனைப்பெற்ற கூட்டுறவுச் சங்கங்கள் தாம் பெற்ற தொகையிலிருந்து 20 சதவீதத்தை மீண்டும் மக்கள் வங்கிக்குச் செலுத்தியிருந்தால் தான் இம்முறை காலபோக விவசாயக்கடன் கிடைக்கும்.'

காலபோக விவசாயக்கடன் வழங்குவதற்கான ஆலோசனைக் கூட்டத்தில் வடபிரதேச மக்கள்வங்கிமுகாமையாளர் திரு. எம். நடராசா இதனைத் தெரிவித்தார்.

இக்கூட்டம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வடபகுதிக்கூட்டுறவுச்சங்கப் பிரதிநிதிகளும், யாழ்ப்பாண உதவிக் கூட்டுறவு ஆணையாளர் திரு. கே. சண்முகலிங்கம் உட்பட பல உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

திரு. எம். நடராசா தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

சங்கங்களில் ஒருவருடகால உறுப்புரிமை பெற்றிருந்தால் தான் கடன்பெறமுடியுமென உபவிதியொன்றுண்டு ஆனால் மக்கள் வங்கி நேரடியாக விவசாயிகளின் தேவைகளை அறிந்து கடனை மக்களுக்கு வழங்கவுள்ளது.

விவசாயிகளுக்கு கடன் வழங்கும் மற்றைய நிதிநிறுவனங்களுக்கு விண்ணப்பித்துக்கடன் பெற்றிருந்தால் மக்கள் வங்கி ஒருபோதும் அப்படியான விவசாயிகளுக்கு கடன்வழங்காது.'

## "நாடக மூலம் நல்ல கருத்தை ஊட்டவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

",நாடகங்கள் வெறும் பொழுதுபோக்குக்காக மட்டும் இருக்கக்கூடாது. நாடகத்தை பார்க்கும் மக்களுக்கு நல்ல கருத்தையும் ஊட்ட வேண்டும்'' என்று கலைவாணி சனசமூக நிலையத்தில் நடைபெற்ற வாணி விழாவில் இடம்பெற்ற 'வண்ணை தெய்வத்தின் 'மன்னுநிமன்னன்' நாடக ஆரம்ப விழாவில் பேசிய வண்ணை தெய்வம் கூறினார்.

இவ் விழாவில் நிலையச் செயலாளரும், மனிதஉரிமை விடுதலை முன்னணி உபதலைவருமான திரு. வீரசிங்கம் பேசுகையில் எமது சிந்தனையெல்லாம் ஒரு குறிக்கோளை மையமாக வைத்து அதனை அடைவதற்கு வழிகாட்டுவதாக இருக்கவேண்டும் என்றார்.

## பயிற்சித்திட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி குருகுல சர்வசக்தி பெண்கள் பயிற்சித் திட்டத்திக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன,

மூன்று மாதகாலம் நடைபெறும் இப்பயிற்சிக்கு க. பொ. த. [சாதாரணம்] சித்தியடைந்த பெண்கள் விண்ணப்பிக்க தகுதி பெற்றவர்கள்.

கிராம முன்னேற்றச் சங்கம் போன்ற அமைப்புக்களில் அங்கத்தவராக இருப்பது முக்கிய தகமையாக எதிர் பார்க்கப்படுகின்றது. இத்தகைய அமைப்புகளின் தலைவரினது சிபார்சுக்கடிதத்தை விண்ணப்பதாரர் இணைத்து அனுப்ப வேண்டும்.

விண்ணப்பப்பத்திரம் தேவையானோர் "நிர்வாகி குருகுலம் கிளிநொச்சி" என்ற முகவரிக்கு இம்மாதம் 20-ம் திகதிக்கு முன்னர் எழுதிப் பெற்றுப் கொள்ளலாம். (கெ-அ)


மயிர்க்கொட்டி உங்கள் பயிர்களைத்தாக்குமுன் அதனைத் தாக்குங்கள்




லன்னேற்-எல் உபயோகியுங்கள்

காய்கறி வகைகள், மிளகாய்ச்செடி, வெங்காயம், புகையிலை முதலிய பெறுமதியான உங்கள் பயிர்களை மயிர்க் கொட்டி தின்று அழிக்கு முன்னர் அதனையே கொன்று அழியுங்கள்.

லன்னேற் எல் கூட்டுறவுக்கடைகள், லங்கெம் விவசாய சேவை நிலையங்கள் ஆகியவற்றிற் கிடைக்கும்.

யூ. எஸ் ஏ. டெலவெயார், வில்மிங்டன், ஈ. ஐ. டு பொன்ட் டீ நெமர்ஸ் அன்ட கம்பனி (இன்கோர்பரேட்டட்) நிறுவனத்தின் பதிவு செய்யப்பட்ட ® வர்த்தக அடையாளம்

ஈழநாடு
The Eelanaadu

## மாவட்ட அமைச்சர்கள்(2)

மாவட்ட அமைச்சர் பதவியைத் தமிழர் விடுதலைக் கூட்டணி ஏற்க வேண்டும் என்றும் ஏற்கக் கூடாது என்றும் கூட்டணிக்குள்ளேயே இரண்டு விதமான அபிப்பிராயம் நிலவுகிறது. இதனால்தான் கூட்டணி இன்னமும் இது பற்றி ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வரமுடியாமலிருக்கிறது.

மாவட்ட அமைச்சர்கள் ஆளும்கட்சி உறுப்பினராக இருக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் தீர்மானம் மாவட்ட அமைச்சர் பதவியைக் கூட்டணி ஏற்க முடியாமலிருப்பதற்கு முக்கிய காரணம் என்று சொல்லலாம்.

மாவட்ட அமைச்சர் பதவியை கூட்டணி ஏற்க வேண்டுமென்றும் ஏற்கக் கூடாது என்றும் பொது மக்கள் மத்தியில் இரண்டுபட்ட கருத்து நிலவுகிறது. கூட்டணிக்கு எதிரான அரசியல்கட்சிகளிலும் இயக்கங்களிலும் இதுசம்பந்தமாக இரண்டுபட்ட கருத்துக்கள் நிலவுகின்றன. மாவட்ட அமைச்சர் பதவியைக் கூட்டணி ஏற்க வேண்டும் என்று கூறும் கட்சியினரே அமைச்சர் பதவிக்கும் சொகுசான வாழ்க்கைக்கும் ஆசைப்பட்டு தமிழினத்தைக் கூட்டணியினர் கைவிட்டுவிட்டனர் என்று பிரச்சாரம் செய்வார்களென்று கூட்டணியினர் கருதுவதில் நியாயமில்லாமலில்லை.

சென்ற பொதுத் தேர்தலில் கூட்டணியினரை எதிர்த்துப் போட்டியிட்ட சுயேச்சைகளும் சில கட்சிகளும் தமிழ்ஈழக் கோரிக்கையையே முன்வைத்திருந்தாலும் தேர்தல் முடிந்த பின்னர் அந்தக் கோரிக்கையில் வெற்றியீட்டிய கூட்டணிக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் கொடுக்கவில்லை. கூட்டணியின்மீது குறை குற்றம் காண்பதிலேயே காலத்தைக் கழிக்கின்றன.

தமிழ்ஈழம் பெறுவதென்பது சுலபமல்ல. இதற்கான போராட்டம் வெறும் மேடைப் பேச்சால் ஏற்பட்டுவிட முடியாது. விடுதலை உணர்வு மக்கள் மனதில் உருவாக வேண்டும். வெறும் உணர்ச்சியால் உண்மையும் நேர்ஒழுங்கும் கட்டுப்பாடும் உள்ள ஒரு சமுதாயத்தை ஏற்படுத்திவிட முடியாது. இந்திய விடுதலைக்குப் போராடிய காந்திமகான் முதலில் சமுதாயத்திலிருந்த சீர்கேடுகளைக் களைந்தெறிவதில் மக்களைத் தயார் செய்தார்.

தமிழ்ஈழம் என்றகோரிக்கையை முன்வைத்துள்ள கூட்டணியும் சரி இதரகட்சிகளும்சரி அடுத்ததேர்தலையும் சமீபத்தில் வரவிருக்கின்ற உள்ளூராட்சிமன்றத்தேர்தல்களையுமே கருத்தில்கொண்டு செயல்படுகின்றன என்பது தெளிவு.

அடுத்த தேர்தலைப்பற்றியும், உள்ளூராட்சிமன்றத் தேர்தல்களில் வெற்றியீட்டி ஆதிக்கத்தைக் கைப்பற்றுவதையும் நோக்கமாகக் கொண்ட கட்சிகளும் அரசியல்இயக்கங்களும் அடுத்த சந்ததியைப் பற்றியோ உண்மையான ஒரு சமுதாயத்தை உருவாக்குவது பற்றியோ சிந்திக்கமுடியாது.

சமீபத்தில் இலங்கைக்கு வந்திருந்த தமிழ்நாடு திராவிடர் கழகப் பொதுச்செயலாளர் கடலூர் திரு. கே. வீரமணி, 'ஐந்துவருடத்தின்பின்வரும்தேர்தலைப் பற்றிச்சிந்திக்கும் அரசியல்வாதிகளால் சமுதாயச் சீர்திருத்தம்பற்றிச் சிந்திக்க முடியாது' என்று சரியாக எடுத்துக்காட்டி மக்களை அடிமைத்தளையிலிருந்துவிடுதலை பெறச்செய்வதற்கு சமுதாயச்சீர்திருத்தம் அவசியமென்பதை வலியுறுத்தியிருந்தார்.

தமிழ் 'ஈழம்' என்று எந்த இயக்கம் அல்லது எவர் பேசினாலும் அந்த இயக்கம் அல்லது அவர் சமுதாயச் சீர்திருத்தத்திலீடுபடாத வரை வெறும் பேச்சாகத் தானிருக்கமுடியும்.

தமிழ் ஈழம் பெறுவதாக இருந்தால் தமிழ் மக்களின் பொருளாதார நிலை விருத்தியடையவேண்டும். பொருளாதார விடுதலைதான் அடிமைத் தளையிலிருந்து விடுதலை பெறுவதற்கு முதல் படி.

தமிழ்ப்பகுதிகளின் பொருளாதார விருத்திக்கு மாவட்ட அபிவிருத்தி ஒரு நல்ல சந்தர்ப்பம். கூட்டணியினர் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி மாவட்ட அமைச்சர் பதவியை ஏற்பதற்கு கூட்டணியின்மீது குறை குற்றம் காண்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளவர்களும் அடுத்த தேர்தல்வரையாவது ஒத்துழைப்பும் ஊக்கமும் அளிப்பது தமிழ்ச் சமுதாயத்துக்குச் செய்யும் பெரும் சேவையாகும்.

# வேண்டுவன அருளும் விண்ணவர் பெருமான்வல்லிபுர ஆழ்வார்

-- சிங்கைத் திவாகரன் --

"எப்பொழுதெல்லாம் அதர்மம் மேலோங்கித் தர்மம் அழிகின்றதோ, அப்பொழுதெல்லாம் நல்லவர்களைக்காப்பதற்காகவும் தீயவர்களை அழிப்பதற்காகவும் என்னை நான் பிறப்பித்துக் கொள்கின்றேன்'' என்கின்றதன்னுடைய திருவாக்கிற்கிணங்க எம்பிரான் ஸ்ரீமன் நாராயணன், பச்சிளம் பாலகனுகச் சக்கராவதாரம் எடுத்தது ஈழத்து ஆயர்பாடியான வல்லிபுரத்தில் என்ருல் மிகையாகாது.

### தெட்சண கைலாய புராணத்தில் வல்லிபுரம்

எம்பிரான் ஸ்ரீமன் நாராயணனுடைய இந்த அவதாரம் பற்றி மிகவும் மகிமைபெற்ற தெட்சணகைலாய புராணத்தில் 'வல்லீபுர வைபவ அத்தியாயம்' என்ற தலைப்பின் கீழ் சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது. அதாவது முன்னெரு காலத்தில் வல்லிபுரப் பகுதியில் வசித்துவந்த 'இளவல்லி நாச்சியார்' என்ற அம்மையாருக்கு முற்பிறவியில் ஏற்பட்ட நாகசாபத்தின் காரணமாக நீண்டகாலம் பிள்ளைப்பலன் இல்லாமல் இருந்தது. இதனுல் மிகவும் மனம் வருந்திய அவர் 'தனது தோஷத்தை நீக்கித் தனக்குப் பிள்ளைப்பலன் கிடைக்க வழி செய்யுமாறு' கோரி எம்பிரான் ஸ்ரீமன் நாராயணனை நோக்கித் தவமிருந்தார். அவரது தவத்தை மெச்சிய எம்பிரான் அவரது வேண்டுதலை நிறைவேற்றஎண்ணி, ஒருநாள் வல்லிபுரத்திற்குச் சமீபமாக உள்ள வங்கக்கடலிலே ஓர் அதிசய மீனுக உருவெடுத்தார். இந்த அதிசய மீனனது, அச்சமயம் அங்குமீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த வல்லிபுரத்திற்கு அயற்கிராமமான கற்கோவளப்பகுதி மீனவர்களுடைய வலைகளையெல்லாம் அறுத்தும், சிதைத்தும் சின்னபின்னப்படுத்திப் பெரியமாயாஜாலங்கள் செய்தது. இதனுல் ஆத்திரமடைந்த அந்த மீனவர்களெல்லாம் ஒன்றுதிரண்டு இந்த அதிசய மீனைப்பிடிப்பதற்கு எவ்வளவோ பகீரதப்பிரயத்தனங்கள் எல்லாம் செய்தும் அது அவர்களது கைக்கு அகப்படாமல் துள்ளித்திரிந்து கொண்டிருந்தது.

கடற்கரையில் இவ்வாறு நடந்து கொண்டிருக்கையில், ஊரிலிருந்த இளவல்லிநாச்சி அம்மையாருக்குக் 'கடற்கரைக்கு வந்து சாபவிமோசனம் பெற்றுக் கொள்ளும்படி' கனவில் ஒரு காட்சி தோன்றியது. உடனே அவர் தம் அயலவர்களையும் அழைத்துக்கொண்டு, கடற்கரைக்கு விரைந்து சென்று அங்கிருந்து எம்பிரான் ஸ்ரீமன் நாராயணனைத்தியானிக்கத் தொடங்கினுர். அப்போது அந்த அதிசய மீனனது வானமார்க்கமாகத் துள்ளியெழுந்து ஓர் அழகிய ஆண் குழந்தையாக மாறி இளவல்லி நாச்சி அம்மையாருடைய மடியிலே வந்து மெதுவாக விழுந்தது. அப்போது அங்கிருந்து இந்த அதிசயத்தைக் கண்ணுற்றவர்களெல்லாம் பக்தி மேலீட்டால் தங்களை மறந்து 'கண்ணன் பிறந்துவிட்டான்' என்று ஆரவாரம் செய்தார்கள். வங்கக்கடல் கூடத் தன்னுடைய அலைக்கரங்களைநீட்டி ஆர்ப்பரித்தது. இளவல்லி நாச்சி அம்மையார் எம்பிரானுடைய திருவருளை எண்ணி நெக்குருகினுர்.

பின்னர் அந்த அம்மையார் ஊரிலிருந்து ஓர் அலங்காரப் பல்லக்கை வரவழைத்து, அதிலே அந்தத் தெய்வீகக் குழந்தையை வைத்துச் சுமந்து கொண்டு ஊருக்குத்திரும்பினுர்கள். அப்படித் திரும்பும் வழியில் அவர்களுக்குச் சிறிது களைப்பு ஏற்படவே ஓரிடத்தில் அந்தப்பல்லக்கை இறக்கி வைத்துவிட்டுச் சற்று இளைப்பாறினுர்கள். பின்னர் சிறிது நேரத்தில் அவர்கள் அந்தப் பல்லக்கைத் தூக்க முயன்றபோது அது அசைய மறுத்ததோடு அதிலிருந்த அந்தத் தெய்வீகக் குழந்தைக்குப் பதிலாக ஒரு விஷ்ணு சக்கரம் காணப்பட்டது இதனுல் அங்கிருந்த யாவரும் இந்த அதிசயத்தைப் பார்த்து மலைத்து நின்றவேளையில் அங்கு ஓர் அந்தணர் தோன்றி, இளவல்லி நாச்சி அம்மையாரைப்பார்த்து "அம்மணி! எந்த மானிடராலும் எளிதிற்பார்க்கமுடியாத ஸ்ரீமன் நாராயணனை நீ இன்றைக்கு உன் மடியிலே தாங்கும் பாக்கியம் பெற்றதால் இன்ருேடு உன் சாபம் நீங்குகின்றது. இனிமேல் நீ நற்புத்திரர்களைப்பெற்று சிறப்போடு நீடூழி வாழ்வாய். அத்தோடு இன்று உன்னுேடுகூடஇருந்து வைகுந்தவாசனை நேரில் தரிசிக்கும் பாக்கியம்பெற்ற ஜனங்களும் புண்ணியவான்கள் ஆகிவிட்டார்கள். உன்னுடைய அசைக்கமுடியாத நம்பிக்கைக்குத் தக்கவாறு-உன்போன்ற நல்லவர்களைக் காப்பதற்காக எம்பிரான் மேற்கொண்ட இந்த அவதாரத்தை நினைவு கூருவதற்காக இந்த இடத்திலே ஓர் ஆலயம் எழுப்பி இந்த விஷ்ணு சக்கரத்தை அதிலே பிரதிஷ்டைசெய்து முறைப்படி பூசித்து வாருங்கள்'' என்றுகூறி மறைந்தார். அதன்பின் இளவல்லி நாச்சி அம்மையாரும் மற்றவர்களும் சேர்ந்து அந்த அந்தணரின் கட்டளைப்படி அவ்விடத்தில் ஆலயத்தைச் சிறப்புடன் அமைத்துப் பூசித்துவந்தார்கள் என்று சொல்லப்படுகின்றது. இன்றும் இவ்வாலயத்தின் மூலஸ்தானத்தில் விக்கிரகத்திற்குப்பதிலாக விஷ்ணு சக்கரமே வைத்துப் பூசைசெய்யப்படுவது குறிப்பிடத்தக்கது.

### வல்லிபுரத்தின் வரலாற்று முக்கியத்துவம்

கடந்தகால இலங்கை வரலாற்றிலே குறிப்பாகத் தமிழ் மக்களுடைய வரலாற்றிலே இந்த வல்லிபுர ஆலயமும், இந்த ஆலயத்தைச் சூழவுள்ள பிரதேசங்களும் ஒரு முக்கிய இடத்தைவகிக்கின்றன. அதாவது இந்த வல்லிபுரப் பிரதேசத்தில் சுமார் பத்து அல்லது பன்னிரண்டு மைல் சுற்றுடலுக்கு பரந்துகிடக்கும் பூர்வகாலக் கட்டிட இடிபாடுகளையும், கல்லோடுகளையும் கீச்சுக்கிட்டங்களையும், பிரமாண்டமான வீதிகளையும், மற்றும் காலத்துக்குக் காலம் காற்று நேரங்களில் இவ்விடங்களில வெளிப்படும் வாள், ஈட்டி, கட்டாரிபோன்ற போர்க்கருவிகளின் சிதைவுகளையும் அவதானித்த வரலாற்ருசிரியர்கள் பலர் இது அமைந்துள்ள வங்கக்கடற்கரைப் பிரதேசத்தைக் கருத்திற்கொண்டு பீறசான்றுக் குறிப்புகளோடு ஒப்பு நோக்கிப் பார்த்து, யாழ்ப்பாண அரசர்களின் கீர்த்திமிக்க தலைநகரான 'சிங்கை நகர்' இருந்தது இந்த வல்லிபுரப் பிரதேசத்திலேயே என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். இவர்களது இந்தக் கருத்தை ஊர்ஜிதம் செய்வது போல், கோட்டை இராச்சியத்திலிருந்து படையெடுத்து வந்த செண்பகப் பெருமாள் (சாபுவல் குமரய) சிங்கை நகரை அழித்து நல்லூரைத் தலைநகராக்கிய காலத்தில் (கி பி 1450?) அவனது வெற்றியைக் கௌரவிக்கும் முகமாக எழுந்த 'கோகில சந்தோசய' (குயில் விடுதூது) போன்ற சிங்கள இலக்கிய நூல்களில் சக்கரதெவியோ (சக்கரத் தெய்வம்) என்ற பெயரில் இந்த வல்லிபுர ஆலயம் குறிப்பிடப்படுவதைக் கவனிக்க வேண்டும்.

இதைத்தவிர அண்மைக் காலங்களில் இப்பகுதியில் கண்டெடுக்கப்பட்ட (ஈமத்) தாழிகள் இப்பிரதேசத்தில் வசித்த தமிழர்களின் தொன்மைக்கு சான்ருகவுள்ளன. அதாவது இறந்தவர்களை ஈமத் தாழியிலிட்டுப் புதைக்

(7-ம் பக்கம் பார்க்க)

### மனவிருந்து

எப்பொழுதும்முகமலர்ச்சியுடன் இரு. கவலையை அறவே ஒழி.

—ஸ்ரீசுவாமி சிவானந்த சரஸ்வதி

எலெக்ரோனிக் வாச் எவரெடி பற்றறிகள் மற்றும் சகல சிறிய எவரெடி பற்றறிகளுக்கும்
வடமாகாண ஏக விநியோகஸ்தர்கள்:-

நியூ விக்ரேஸ்

23, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7349

விலை விபரம்:

| ரகம் | 303 | 313 | 325 | 343 | 357 | 386 | 389 | 392 | 393 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| விலை | 24-00 | 23-00 | 23-00 | 23-00 | 23-00 | 21-00 | 22-00 | 21-00 | 21-00 |

குறிப்பு: அறிவித்தலின்றி விலைகள் மாற்றத்திற்குரியன.

தெல்லிப்பழை ப. நோ. கூ. ச.

## அகதிகள் புனர்வாழ்வுக்கு 5000 ரூபா ஒதுக்கீடு

(மாவிட்டபுரம்)
வருடாந்தம் சங்கத்திற்குக் கிடைக்கும் இலாபத்தில் அங்கத்தவர்களுக்கு பங்கீடுசெய்து வழங்குவதுடன் சங்க ஊழியர்களுக்கும் போனஸ் வழங்குவதென தெல்லிப்பழை பல நோக்குக்கூட்டுறவுச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேற்படி கூட்டம் சங்கத்தலைவர் திரு. எஸ். சிவமகாராசா தலைமையில் நடைபெற்றது.

மற்றும் சங்கப் பொதுநல நிதியிலிருநது அகதிகள் புனர்வாழ்வுக்காக 5000 ரூபா வழங்குதல், சங்கத் தொழிற் பரப்பினுள் பயிரிடப்படும் வெற்றிலைகளைக் கொள்வனவு செய்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்வது; மண்ணெண்ணைக் குதங்கள் அமைத்து, விவசாயிகள் மண்ணெண்ணை பெறுவதில் ஏற்படும் கஷ்டங்களைப் போக்குவது, சீனுவிலிருந்து மின்தறி நிலையத்திற்குத் தேவையான உபகரணங்களை இறக்குமதி செய்வது; காங்கேசன்துறை துறைமுகத்தில் கப்பல்களிலிருந்து பொருட்களை இறக்குமதிசெய்யும் கூலி ஒப்பந்தவேலைகளை பொறுப்பேற்று நடத்துதல் போன்ற தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. (ஈ)

2 லட்சம் ரூபா செலவில்

## ஊரிக்கிராமத்திற்கு குழாய்நீர்த்திட்டம்

(காரைநகர்)
காரைநகர் ஊரிக்கிராமத்தில் முக்கிய பெரும் பிரச்னையாகவிருந்துவரும் குடிநீர்க் கஷ்டத்தை நிவர்த்திசெய்யுமுகமாக சீ-நோரா அபிவிருத் திட்டத்தினர் ஊரிக்கிராமத்திற்கு 2 லட்சம் ரூபா செலவில் குழாய் நீர் விநியோகத்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளனர்.

இத்திட்டத்திற்கு நோர்வே மாதர் முன்னேற்றக்கழகம் நோர்வே சுவீடன் தேச நல்லொழுக்க வாலிபர் இயக்கம் சீ-நோர் அபிவிருத்தித்திட்டம் அகியஸ்தாபனங்கள் ஒன்றிணைந்து உதவியளித்து வருகின்றன.

இதற்கு வட்டுஃம் பி திருதா திருநாவுக்கரசு இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவு திட்டத்தின்கீழ் 50 ஆயிரம் ரூபாவினை ஒதுக்கியுள்ளார்.

இவ்வேலைகள் அனைத்தும் ஊரி மக்கள் சிரமதானமுறையில் மிக துரிதமாக செய்துவருகின்றார்கள்.

இத்திட்டவேலைகள் அனைத்தும் ஒரு மாதத்தில் பூர்த்தியாகுமென நம்பப்படுகின்றது.

விசுவமடு:

## அகதிகள் முகாமில் இலவச குடும்பநலச்சேவை

(விசுவமடு)
இலங்கை குடும்பத்திட்டச் சங்கத்தின் யாழ். கிளையினுல் விசுவமடு அகதிகள் முகாமில் இலவச குடும்பநலசேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆரம்பதினமான கடந்த சனிக்கிழமை, வடபகுதி பொதுமக்கள் தொடர்பு அதிகாரி திரு. எஸ். சண்முகசுந்தரம் ஆரம்பவுரை நிகழ்த்துகையில், யாழ். அரசாங்க அதிபர் அலுவலக சேவைகள் இவ்வாருன முயற்சிகளுக்கு உதவிகள் நல்க சித்தமாயிருப்பதாகக் கூறினுர். யாழ் சுகாதார திணைக்களத்தைச் சேர்ந்த தாய் சேய் சௌக்கிய அதிகாரி டாக்டர் எஸ் மகோற்கடன் குடும்ப சௌக்கியத்தின் பல அம்சங்கள்பற்றி விளக்கிக் கூறினுர்.

குடும்பத்திட்டச் சங்கத்தின் கௌரவ மருத்துவ நிபுணர் டாக்டர் பரமேஸ்வரஐயர் அம்பிகாபதி, சங்கத்தின் சேவைகளை விபரிக்கையில், யாழ். அரசாங்க அதிபர் காரியாலயம், யாழ். சௌக்கிய திணைக்களத்தின் பேருதவியுடன் விசுவமடு மக்களின் குடும்பநலன்களைப் பேணிப் பாதுகாக்க குடும்பத்திட்டச் சங்கம் பல திட்டங்களைத் தீட்டியிருக்கிறதெனக் குறிப்பிட்டார்.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. சொக்கலிங்கம் யாழ். சுகாதாரக் கல்வி அதிகாரி திரு. கே. குமாரசிங்கம், கிளிநொச்சி சௌக்கிய அதிகாரி செல்வி கந்தசாமி ஆகியோரும் கருத்துரை வழங்கினர். அன்று விசுவமடு அகதிகள் முகாமிலுள்ளோருக்கு டாக்டர்கள் மகோற்கடன், அம்பிகாபதி, கந்தசாமி ஆகியோர் வைத்திய சேவைகளை வழங்கினர். யாழ். குடும்பநலக்குழுவின் திட்ட அதிகாரி திரு. வி. கந்தையா, இந்த குடும்பநல சேவையை ஆரம்பிப்பதற்குரிய ஒழுங்குகளைச் செய்திருந்தார்.

## 'பிறப்பின்பலன் பேரின்பமே'

(புலோலி)
"பிறப்பினுல் நாம் அடைய வேண்டிய பலன் பிறவாமையாகிய பேரின்பமே. இதனை மக்கள் யாவரும் இப்பிறவியில் அடைவது சிறந்தது. இதற்கு வழிகாட்டியாகவுள்ளது சமயம். எனவே நாமெல்லோரும் சமயவழி நின்றொழுகுவது முக்கியமானதாகும்".

புலோலி ஆண்கள் ஆங்கில மகாவித்தியாலய அதிபர் திரு. வி. சே. ஏகாம்பரநாதன், புலோலி பொன். சின்னத்துரையின் முதலாவது ஆண்டு நினைவு விழா விலே கலந்து கொண்டுஉரையாற்றும்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இவ்விழா பெரியதேவன் சனசமூகநிலைய அருகாமையில் திரு. மயில்வாகனம் தலைமையில் நடைபெற்றது (க)

## தற்கொலை

(புலோலி)
கணவன் விருப்பத்தை மனைவி நிறைவேற்ற மறுத்தமையால் மனமுடைந்த கணவன் நச்சுத்திராவகம் அருந்தி தற்கொலை செய்துகொண்டார்.

அல்வாய் வடக்கு குமுதனி என்ற இடத்தைச் சேர்ந்த ஐயன் சிவலிங்கம் (வயது 35) என்பவரே தற்கொலைபுரிந்தவராவர். மரணவிசாரணையை திரு. எம். வி. புவனேந்திரன் மேற்கொண்டு தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (அ)

சன்சோனிக்கமிஷன்

## பெண்கள் கூறிய கண்ணீர்க்கதை

(திருகோணமலை)
இங்கு நடைபெற்று வரும் சன்சோனி விசாரணைக் கமிஷன் முன்பாக நேற்று முன்தினம் சில விதவைகள், தங்களின் துயரம் தோய்ந்த கண்ணீர்க் கதைகளைக் கூறினர்.

'எனது கணவரின் பெயர் இராசையா செந்திவேல். கலவரம் நடைபெற்ற காலத்தில் நாங்கள் வெல்வெரிஎன்னுமிடத்தில் வசித்து வந்தோம். கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 24-ம் திகதி வெல்வெரியிலிருந்து எனது கணவர் மரக்கறி வாங்குவதற்காக திருக்கோணமலை பஸ்ஸில் சென்றுர். போனவர் போனவர்தான். அவரைப் பின்னர் நான் உயிருடன் பார்க்கவில்லை இது பற்றி நான் விசாரித்ததில், மரக்கறி வாங்கிக் கொண்டு பஸ்ஸில் திரும்புகையில், வெல்கம் விகாரைக்கு அருகில் எனது. கணவர் இழுத்துச் செல்லப்பட்டு சிங்களக்காடையர்கள் எனது கணவரை கொன்று விட்டனர் என்ற விபரம் தெரிய வந்தது.' இவ்வாறு சிவ புரியைச் சேர்ந்த 18 வயது இளம்பெண் மகேஸ்வரி தமது சாட்சியத்தில் அழுதழுது கூறினுர்.

3) வயதுள்ள திருமதிராசலட்சுமி சாட்சியமளிக்கையில், தனது கணவர் சிங்களக் கடையர்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்று கூறினுர்.

'எனது கணவர் ஒரு பஸ் கண்டக்டர் திருகோணமலை இ. போ. சபையில் கடமையாற்றினுர். கடந்த வருடம் ஆகஸ்ட் மாதம் 22-ம் திகதி எமது ஐந்து பிள்ளைகளுடனும் ஒன்ருக இருந்து மதிய போசனம் சாப்பிட்டு விட்டு திருக்கோணமலை டிப்போவுக்குச் சென்ருர். சிறிது நேரத்தில் அவர், 'லவ்லேன்' என்னுமிடத்தில் தாக்கப்பட்டதாக அறிந்தேன். உப்புவெளி பொலிஸ் நிலையத்திலிருந்து 100 யார் தூரத்தில் வைத்து சிங்களக் காடையர்களால் எனது கணவர் தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டார்" என்றும் சாட்சி கூறினுர்.

திருமதி பரமேஸ்வரி குமாரசாமி (30 வயது) மேரி கிரசரி (39 வயது) ஆகியோரும் தங்களின் கண்ணீர்க் கதைகளைக் கூறினர்.

"கூட்டணியின்

## தீண்டாமை ஒழிப்பு மாநகரசபைத் தேர்தலுக்கே"

### மகாசபை செயலாளர் சொல்கிருர்

(யாழ்ப்பாணம்)
தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் தீண்டாமை ஒழிப்பு எதிர்வரவிருக்கும்யாழ்ப்பாண மாநகரசபை தேர்தலில் சிறுபான்மைத்தமிழர் ஆதரவை தம்பக்கம் இழுப்பதற்கென்பது பரமரகசியமாகிவிட்டது.

புலோலி கிழக்கில் நடந்த சிறுபான்மை தமிழர் மகாசபைக் கருத்தரங்கில் பேசிய மகாசபை பொதுச் செயலாளர் திரு. பி. கே. அன்ரனி மேற்கண்டவாறு கூறினுர்.

மகாசபை உபதலைவர் திரு சி. சிற்றம்பலத்தின் தலைமையில் நடந்த கருத்தரங்கில் திரு அன்ரனி மேலும் கூறியதாவது தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சமூகக் குறைபாடுகள் ஒழிப்பு முயற்சியில் அண்மையில் ஈடுபட்டது தமது அரசியல்செல்வாக்கை சிறுபான்மை தமிழர் மத்தியில் நிலைநிறுத்துவதற்கும், அப்பாவி மக்களை ஏமாற்றுவதற்குமே கூட்டணியினர் 77ம் ஆண்டு தேர்தலுக்குப்பின் சாதிப்பிரச்னைகள் இல்லை சாதிக்கு சாவுமணி அடித்துவிட்டோம் என்று கூறியதுமல்லாமல் எம்மைப் பார்த்து நையாண்டியும் செய்தார்கள்.

ஆனுல், திடுதிப்பென இன்று சமூகக் குறைபாடுகள் ஒழிக்கவும், சாதியொழிக்கவும் இவர்கள் வெளிக்கிட்டுள்ளனர். அன்று சாதி வேற்றுமைகள் இல்லையென்றவர்களுக்கு; தேர்தலுக்குப்பின் சாதிக்குச் சாவுமணி அடித்துவிட்டோம் என்று கூறியவர்களுக்கு திடீரென எங்கிருந்து இந்தச் சாதி வந்ததெனதெரியவில்லை.

கோப்பாய்த் தொகுதியில் 150 கோயில்கள் சிறுபான்மைத் தமிழருக்கு கதவடைப்புச் செய்துள்ளன என்று இவர்கள் கூறுகின்றனர் இன்று. நாம் அன்று கூறியபோது அப்படி ஒன்றும் இல்லையென்று மறுத்தார்கள்

அதுமட்டுமன்றி அக்டோபர் 2ந் திகதிக்குள் சாதியை ஒழித்துவிடுவோமென்று எல்லையும் நியமித்தனர். ஆனுல் இன்று அக்டோபர் இரண்டாந்திகதிக்குள் சாதிப் பிரச்னையைத் தீர்க்கமுடியாது போய்விட்டது.

ஆலயங்களையும் தேநீர்க் கடைகளையும் சிறுபான்மைத் தமிழர்களுக்குத் திறந்துவிட்டால் மட்டும் தீண்டாமையையும், சமூகக் குறைபாடுகளையும் ஒழித்துவிடமுடியாது அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளை இவர்கள் தீர்க்கமுன்வரவேண்டும்.

சிறுபான்மைத் தமிழர் மத்தியில் நிலமில்லாப்பிரச்னை தொழிலில்லாப்பிரச்னை, வீடில்லாப்பிரச்னை உக்கிரமான நிலையில் உள்ளன. சிறுபான்மைத் தமிழரின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இவர்களுக்கு அக்கறையிருந்தால் இப்பிரச்னைகளைத் தீர்க்க முயற்சியெடுக்கட்டும். (க-ஈ)

## தாய்மீது 'பலம்' காட்டினுராம் தனயன்

(மாவிட்டபுரம்)
தமது மகனுல் தாக்கப்பட்டு படுகாயமடைந்த தாய் ஒருவர் தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இவரைத் தாக்கியதாகக் கூறப்படும் மகனை காங்கேசன்துறைப் பொலிசார் தேடிவருகின்றனர்.

பன்னலையைச் சேர்ந்த கதிர்காமு பார்வதி என்னும் தமது தாயாரை கையாலும் பொல்லாலும் தாக்கிப் படுகாயப் படுத்திவிட்டு அவரது மகன் கதிர்காமு சிவரத்தினம் என்பவர் தலைமறைவாகிவிட்டாம்.

மேற்படி தாய் தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெறுகிருர். அவரது புகாரின் பேரில் காங்கேசன்துறைப் பொலிசார் அவரது மகனை தேடிவருகின்றனர்.

## சரஸ்வதி... சாதிப் ப...

### மாணவர்கள்...

(யாழ்ப்பாணம்)
சரஸ்வதி பூசையின் போது ஆசிரியர்களும் அதிபரும் பாகுபாடு காட்டி நடந்துகொண்டனர் என்று சிறுபான்மைத் தமிழ்ப்பிள்ளைகளான மாணவர்கள் சரஸ்வதி பூசையைப் பகிஷ்கரித்து வீட்டுக்குச்சென்றனர்.

அச்சுவேலிப்பகுதியில் ஒரு பாடசாலையில் இச்சம்பவம் நடைபெற்றது.

சரஸ்வதிபூஜைக்கு சகல மாணவர்களிடமிருந்தும் பணம் அறவிடப்பட்டதாயினும் பூசைக்கான ஏற்பாடுகளில் சிறுபான்மை இனப் பிள்ளைகள் புறக்கணிக்... பூசைக்குத்... காய்களை ... பித்தது மா... களிடம் ... யாம்.

சிறுபான்...

## காட்டுக்குள் சடலம்

(புலோலி)
கோவில்பூசகர் ஒருவரின் சடலம் சிதைவுற்ற நிலையில் சவுக்கம் காட்டுப் பகுதியில் கண்டெடுக்கப்பட்டது. பருத்தித்துறைத் தொகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தை விசாரணை செய்த மரணவிசாரணை அதிகாரி பகிரங்க திர்ப்பு வழங்கினுர்.

பருத்தித்துறையைச்சேர்ந்த சுப்பையாபிள்ளை கணேசபிள்ளை (வயது 58) என்ற கோவில் பூசகரின் சடலமே காட்டுப்பகுதியில் கண்டெடுக்கப்பட்டதாகும் இவரின் மரணம் சம்பந்தமானமரணவிசாரணையை மரணவிசாரணைஅதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் நடத்தினுர். (க)

நீதிம...

## 2... பி...

(யா...
சாவகச்... பாக்கிகள்... பாக ரிவ... டிருந்த 4... ளில் நேற்... தலா 100... விடுதலை ...
சாவகச்... நீதவா... ஞண்டோ... தமிழ் இ... காலைஆஜ...
சந்தேக... சட்டத்தர... பொன்ன... ஆர். ஈ. ... லோகேஸ்... ரன், எஸ்... எஸ். ஸ்ரீ...



# வதி பூசையில் ப் பாகுபாடா?

## வர்கள் பகிஷ்கரித்தனர்

பிள்ளைகள் பல வகையிலும் புறக்கணிக்கப்பட்டார்களாம். பூசைக்குத்தேவையான தேங் காய்களை மரத்திலிருந்து பறிப் பித்தது மாத்திரம்தான் இவர் களிடம் பெறப்பட்ட உதவி யாம்.

சிறுபான்மையின மாணவர் கள் புறக்கணிக்கப்பட்டதை ஆட்சேபித்து அப்பாடசாலை யின் மேல்வகுப்புகளில்பயிலும் வேறு இன மாணவர்கள் சில ரும் பூசையில் கலந்து கொள் ளாமல் சென்று விட்டார் களாம்.

---

### நீதிமன்ற துப்பாக்கி கொள்ளை:

# 24 இளைஞர்கள் பிணையில்விடுதலை

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிநீதிமன்ற துப் பாக்கிகள்கொள்ளை தொடர் பாக ரிவாண்டில் வைக்கப்பட் டிருந்த 40 தமிழ் இளைஞர்க ளில் நேற்று 24 இளைஞர்கள் தலா 1000 ரூபா பிணையில் விடுதலை செய்யப்பட்டனர்.

சாவகச்சேரி நீதிமன்றத்தில் நீதவான் ஐவன் பெர் ணண்டோ முன்னிலையில் 40 தமிழ் இளைஞர்களும் நேற்றுக் காலை ஆஜர்செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகளான ஜி. ஜி. பொன்னம்பலம் (ஜூனியர்) ஆர். ஈ. தம்பிரத்தினம், எஸ். லோகேஸ்வரன், கே. மனோக ரன், எஸ்.பி. மயில்வாகனம், எஸ். ஸ்ரீநிவாசன், என்.சிறி காந்தா வி. பாலசுப்பிரமணி யம், எஸ், சுரேந்திரன், வி. அம்பலவாணர், கே. பி. எஸ். வரதராஜா ஆகியோர் ஆஜ ரானார்கள்.

பொலிஸ்தரப்பில் சாவகச் சேரி இன்ஸ்பெக்டர் விக்கிரம சிங்கா, சார்ஜன்ட் என்.குகதா சன் ஆகியோர் ஆஜரானார் கள்.

சந்தேகநபர்களான 40இளை ஞர்களும் பலத்த பாதுகாப் புடன் நீதிமன்றத்துக்குக் கொண்டுவரப்பட்டு, நீதிமன்ற பார்வையாளர் இடத்தில் அமிர்ந்திருந்தனர்.

விசாரணையைப்பார்க்க நீதி மன்றத்திற்கு உள்ளேயும்வெளி யேயும் ஏராளமானோர்காணப் பட்டனர்.

---

### கூட்டணியினருக்கு வரதர் தரும் யோசனை

மாவட்ட மந்திரிகள் தொடர்பாக ஏற்பட் டுள்ள சிக்கலிலிருந்து விடுபட தமிழர் விடு தலைக் கூட்டணித் தலை வர்களுக்கு எழுத்தா ளர் 'வரதர்' அருமை யான யோசனை யொன்றை கூறுகிறார். ஈழநாடு 15-10-78வார மலரில் எதிர்பாருங்கள்.

---

## கைதடி மேற்கு ச.ச.நிலையம்

[யாழ்ப்பாணம்]

கைதடி மேற்கு ஜனசமூக நிலையத்தின் 28 வது வரு டாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்படுள்ளனர்.

போஷகர் சி. சிவகப்பிர மணியம், தலைவர் நா.ஸ்ரீரங் கநாதன், உப-தலைவர் த. தம்பிராசா, செயலாளர் இ. ஸ்ரீகுகஞானசோதி, உபசெய லாளர் க. பூபாலசிங்கம் பொருளாளர் சி. கதிர்காம நாதன், கணக்குப்பரிசோதகர் சு. பேரின்பலிங்கம் பொறுப் பாளர் க. சிதம்பரநாதன். உறுப்பினர்கள் 11 பேர்.[அ]

---

பிணையில்விடப்பட்ட 24 பேரும் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு சாவ கச்சேரி பொலிஸ்நிலையத்திற் குச்சென்று பதிவுசெய்யவேண் டும் என்றும் மற்றும் 7சந்தேக நபர்களின் கைவிரல் அடையா ளம்பதிவுசெய்யவேண்டும் என தெரிவித்த நீதிவான், இம் மாதம் 24ந் திகதிக்கு வக்கை ஒத்திவைத்தார். (க)

---

சங்கானைச் சம்பவம்

# அடையாள அணிவகுப்புக்கு நீதிபதி உத்தரவு

(மாவிட்டபுரம்)

சங்கானைப் பொலிசாரர்ஸ் துப்பாக்கிப் பிரபோகம்செய்து கைதுசெய்யப்பட்டு மல்லாகம் நீதிபதியால் றிமாண்டில்வைக் கப்பட்ட சந்தேகநபரை இம் மாதம் 18ம் திகதி அடையாள அணிவகுப்புக்கு உட்படுத்து மாறு மல்லாகம் நீதிபதி உத் தரவிட்டுள்ளார். அத்துடன் அவரை மீண்டும் சட்டவைத் திய பரிசோதனைக்குட்படுத்து மாறும், சந்தேகநபர்மீதான குற்றச்சாட்டுகள் குறித்து சாட்சியங்களை எதிர்வரும் 18ம் திகதிக்கிடையில் தம்முன்னிலை யில் சமர்ப்பிக்குமாறும் சங்கா னைப் பொலிசாருக்கு அவர் மேலும் உத்தரவிட்டுள்ளார்.

வடபகுதியில் இடம்பெற்ற பல வன்செயல்கள் தொடர் பாக ஏற்கனவே கைதாகி விலங்குடன் தப்பியோடிய அளவெட்டியைச் சேர்ந்த சரவணமுத்து சற்குணசிங்கம் என்பவர் சங்கானைப் பொலி சாரால் அண்மையில் துப் பாக்கி பிரயோகம்செய்துகைது செய்யப்பட்டு மல்லாகம் நீதி மன்றத்தில் ஆஜர்செய்யப் பட்டபோது றிமாண்டில் வைக்கப்பட்டிருந்தார்.

இவர் மல்லாகம் நீதிமன்றத் தில் நேற்றுமுன்தினம் ஆஜர் செய்யப்படுவாரென எதிர் பார்க்கப்பட்டபோதும் அவர் ஆஜர்செய்யப்படவில்லை. சந் தேகநபரை இரகசியப் பொலி சார் விசாரணை செய்வதால் அவரை தொடர்ந்து றிமாண் டில்வைக்குமாறும் பின்னர் அடையாள அணிவகுப்பு நடத்தலாமெனவும் சங்கானை பொலிசார் தெரிவித்தனர்.

இதை சந்தேகநபர் சார்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் ஆட்சே பித்தார்.

''இச்சந்தேகநபர் சம்பந்தப் பட்டதாக பொலிசார் 'பி' அறிக்கையில் தெரிவித்துள்ள வன்செயல்கள் ஒருவருடத் துக்கு முன்பு நடந்தவையா கும். அவை குறித்து அப் போதே இரகசியப் பொலி சார் விசாரணைமேற்கொண் டனர். தற்போது மீண்டும் விசாரணைஎன்று கூறுவது சரி யல்ல. அதற்காக அவரை றிமாண்டில் வைப்பதும் சரி யல்ல. விசாரணை நீடித்துக் கொண்டேபோனல் அதுவரை சந்தேகநபர் றிமாண்டில் இருக்கவேண்டுமா என்பது பற்றி நீதிபதி ஆராய வேண்டும். அடையாள அணி வகுப்பு விரைவில் நடைபெற வேண்டுமென்பதே எனது வாதமாகும். அதுமட்டுமன்றி சந்தேகநபர் சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட் படுத்தப்பட்டு அவர்தப்பி ஓட லாம் என்பதற்காக. சுகம் ஏற் படாமலேயே விளக்கமறிய லுக்கு அனுப்பப்பட்டுள்ளார். அவரை மீண்டும் சட்ட வைத் திய பரிசோதனைக்குட்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள் கிறேன் சந்தேகநபர்மீது சங் கானைப்பொலிசார் 6 பாரதூர மான குற்றச்சாட்டுக்களைச் சுமத்தியுள்ளனர். ஆனல் அக் குற்றச்சாட்டுகளை உறுதிப் படுத்த சாட்சியங்கள் இருக்கி றதா ஒன்பதை தெரிவிக்க வில்லை. சாட்சியங்கள இல்லா மல் ஒருவரை பொலிசார் குற்றவாளி என்று சொல்வ தற்காக றிமாண்டில் வைத்தி ருப்பது முறையாகாது'

(8-ம் பக்கம் பார்க்க)




## கண்டக்டரும் சாரதியும் நடத்திய 'இரவு நாடகம்'

(கிளிநொச்சி)

கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவைச் சேர்ந்த ஒரு சாரதியும் கண்டக்டரும் நடத்தி முடித்த ஒரு 'இரவு நாடக'த்தின் எதிரொலி- அவர்கள் இருவரினது வேலைக்கும் ஆபத்தை ஏற்படுத்தியுள்ளது!

இதுபற்றிக் கூறப்படுவதாவது:-

முருகண்டியிலிருந்து கிளிநொச்சிக்கு வன்னேரிக்குளத்திலிருந்து வந்த பஸ்ஸில் ஏறிய பிரயாணி ஒருவருக்கு அந்த பஸ் கண்டக்டர் டிக்கெட் வழங்க மறுத்தது மட்டுமல்லாது அவரை பஸ் நிலையத்தில் டிக்கெட் பரிசோதகர்கள் முன்னிலையில் வைத்து நையப்புடைத்த சம்பவம் கிளிநொச்சி பஸ் நிலையத்தில் கடந்த வெள்ளியன்று நடைபெற்றது.

தாக்கப்பட்ட பிரயாணி கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அவர் பொலிஸில் செய்து கொண்ட முறைப்பாட்டைத் தொடர்ந்து நடைபெற்ற விசாரணையில் பல திடுக்கிடும் விபரங்கள் வெளிவந்துள்ளன.

கடந்த வெள்ளிக்கிழமை வன்னேரிக்குளத்திலிருந்து கிளிநொச்சிக்கு வந்த பஸ்ஸில் ஏறிய பிரயாணிகளுக்கும் அவர்களிற் சிலர் கொண்டு வந்த சாமான் மூடைகளுக்கும் பணம் வசூலிக்கப்பட்டும் டிக்கெட் வழங்கப்படவில்லையாம். பஸ் வண்டியின் சகல மின்விளக்குகளையும் அணைத்துவிட்டு ""பஸ்ஸில் லைட் இல்லை கிளிநொச்சியில் வெளிச்சத்தில் டிக்கெட் போடுவோம்'' என்று தெரிவித்த சாரதியும் கண்டக்டரும் கிளிநொச்சியில் வெளிச்சத்தில் பிரயாணிகளுக்கு டிக்கெட்டிற்குப் பதிலாக 'கைவரிசை'யைக் காட்டினார்களாம்! வழியில், இந்த பஸ்ஸில் ஏறிக்கொண்ட டிக்கெட் பரிசோதகர்கள் தடுக்கத் தடுக்க சாரதியும், கண்டக்டரும் கடமையில் ஈடுபடாத கண்டக்டர் ஒருவரும் சேர்ந்து ஒரு பிரயாணியை நையப்புடைத்தார்களாம். இவ்வாறு நையப்புடைக்கப்பட்டவர் பழனியாண்டி பொன்னையா (44 வயது).

டிக்கெட் நாடகம் நடத்தி தாக்குதலிலும் ஈடுபட்ட சாரதியும் கண்டக்டரும் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்படலாம் என்று கிளிநொச்சியின் இ. போ. சவின் தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

---

(யாழ்ப்பாணம்)

தூர இடங்களிலிருந்து யாழ். பெரியாஸ்பத்திரி 'கிளினிக்'கிற்கு வரும் கர்ப்பிணிகளுக்கு இலவசமாகச் சோடா பானம் வழங்க லயன்ஸ் மாதர் கழகம் நடவடிக்கை எடுத்துவருவதாக லயன்ஸ் கழக மாதர் தலைவி திருமதி ராஜேந்திரா தெரிவித்தார். (கெ-அ)

---

## விசுவமடு வாழைப்பழம் மட்டுநகர் செல்கிறது

(விசுவமடு)

விசுவமடுப் பகுதியில் இருந்து வாரம்தோறும் லொறிகள் மூலம் வாழைக்குலைகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் பெருந்தொகையாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன.

கல்முனை, ஏறாவூர் பட்டிருப்பு ஆகிய பகுதிகளில் இருந்து வியாபாரிகள் பலர் விசுவமடுவில் உள்ள வாழைத் தோட்டங்களில் வாழைக்குலைகளை கொள்வனவு செய்து மட்டுநகருக்கு அனுப்பி வைக்கிறார்கள். இதனால் இப்பகுதியில் வாழைக்குலைக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது.

விசுவமடுவில் இப்போது பெருந்தொகையான வாழைத் தோட்டம் உற்பத்தியாக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. (அ)

---

## இன்று அகில உலக வெள்ளைப் பிரம்பு பாதுகாப்பு தினம்

-- ஜெயசிங் எஸ். டேவிற் --

(அதிபர்-நவீல்ட். செவிப்புலன் விழிப்புலன் இழந்தோர் பாடசாலை, கைதடி)

இவ்வருடம், அகில இலங்கை வெள்ளைப் பிரம்பு பாதுகாப்புத்தினம் யாழ்ப்பாணத்தில் விசேடமாகக் கொண்டாடப்படுவது மிகவும் பொருத்தமாகும்.

விழிப்புலனிழந்தோர், சமுதாயத்தின் சமபங்காளிகள், சமஉரிமையுடையோர், தனித்துவமும் தனியுரிமையுமுடையோர், சமுதாயத்திற்குப் பாரமாக இராது, தொழிற்துறைகளில் முன்னேற்றம் காணக்கூடியோர் என்னும் கருத்துக்களை அறுத்துறுத்து எடுத்துரைப்பதே இத்தினத்தை அனுஷ்டிப்பதன் முக்கிய நோக்கமாகும்.

### வெள்ளைப்பிரம்பை தாங்கிச் செல்வோர்

வெள்ளைப் பிரம்பு பாதுகாப்புத் தினம், உலகனைத்துமுள்ள பார்வையிழந்தோருக்கு ஒரு முக்கிய தினமாகும். அநேகநாடுகளில் அக்டோபர் 15ம் திகதி வெள்ளைப்பிரம்பு பாதுகாப்புத் தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது. வெள்ளைப் பிரம்பு தாங்கிச் செல்வோருக்குப் பாதைகளில் வாகனங்களால்ஏற்படக்கூடிய ஆபத்துக்களிலிருந்து சட்டத்தின் மூலம் பாதுகாப்பளிக்கப்படுகின்றது. வெள்ளைப் பிரம்பு தாங்கிச் செல்லும் பார்வையிழந்தோருக்குப் பாதைகளில் முதற்செல்லும் உரிமையுண்டு. வெள்ளைப்பிரம்பு, பார்வையிழந்தோரை அடையாளங் காட்டுவதாயுள்ளது. எனவே, வாகனச் சாரதிகள் இவர்களுக்கு ஆபத்து ஏற்படாத வகையில் வாகனங்களை விசேட கவனத்துடன் செலுத்துவதற்குப் பொறுப்பாகிறார்கள்.

### 1930-ல் சட்டமானது

இச்சட்டம் முதன்முறையாக அமெரிக்காவில் இலினோயிலுள்ள பியோரியா நகரத்தில் 1930ம் ஆண்டு சட்டமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது. இதைச் சட்டமாக்கும் செயலைச் சாதித்தவர்கள் பியோரியாவிலுள்ள லயன்ஸ் ஸ்தாபனத்தாராகும். இதன் அடிப்படையில் அநேகநாடுகளில் இப்போது வெள்ளைப் பிரம்புச்சட்டம் அமுலாக்கப் பட்டுள்ளது.

அகில உலக விழிப்புலனற்றோர் சம்மேளனத்தின் கன்வென்ஷன் கூட்டம் 1969ம் ஆண்டு அக்டோபர் மாதம் இலங்கையில் நடாத்தப்பட்டது. இக்கூட்டத்திலேயே அக்டோபர் 15ம் திகதி அகில உலக வெள்ளைப் பிரம்பு பாதுகாப்புத்தினமாகப் பிரகடனப் படுத்தப்பட்டது. பின்னர், மற்றைய நாடுகளும் இதே தினத்தை வெள்ளைப்பிரம்பு பாதுகாப்புத்தினமாக ஏற்றுக் கொண்டன.

### வலதுகுறைந்தோர்

எமது சமுதாயம் வலது குறைந்தோரை மனிதத்துவத்திலும் குறைவாக மதித்து ஒதுக்கிவைப்பதாயுள்ளது. பெற்றோரும், 'விதிப் பயன்' எனக்கூறி வீணே இருப்பது வருந்தத்தக்கது. இன்றைய முன்னேறி வரும் சமுதாயத்தில் வலதுகுறைந்தோரை ஒதுக்கிவைப்பினும் ஒதுங்கி வாழவேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கில்லை. தனி மனிதராக சமத்துவத்தோடும் சுயமரியாதையோடும் வாழ உரிமையுண்டு. அவர்கள் கல்வி பயிலுவதற்கும் தொழிற்துறைகளிலே ஈடுபடுவதற்கும் சுருங்கக்கூறின் வாழ்க்கையை வாழ்வதற்கும் உரிமையுடையவர்களாவர். இதையுணர்ந்து சமுதாயம் அதற்கேற்பச் செயற்படவேண்டும்.

பரிதாபத்திற்குரியோர் விழிப்புலனிழந்தோர் எனக் கருதுவோருமுண்டு. இவர்கள் சமுதாயத்திடம் கேட்பது பரிவும், பரந்த மனப்பான்மையும் இவர்களைப் புரிந்துகொள்ளும் ஆற்றலையுமே. தருமம் செய்து தாமுயரக்கடவுள் தந்த கொடையே விழிப்புலனிழந்தோரெனக் கருதி, இவர்களைத் தருமப் பணத்திலேயே வாழ்நாள் முழுதும் கழிக்கச் செய்ய நினைப்போருமுண்டு. ஆனால் இவர்கள் கேட்பதோ குறைவிலும் நிறைவு காணும் வழிவகைகளை வகுத்துத்தர வேண்டுமென்பதையே.

இன்று அநேக விழிப்புலனிழந்தோர் கல்வி பயின்று பட்டம் பெற்றுப் பதவியிலிருப்பதையும், வேறு தொழிற்துறைகளில் ஈடுபட்டிருப்பதையும் நாம் காணக்கூடியதாகவுள்ளது. தமிழ்பிள்ளைகள் கல்வி பயில யாழ்ப்பாணத்திற் கைதடியில் விசேட பாடசாலையுண்டு. மேலும் சாதாரணப் பாடசாலைகளிலும் அநேக விழிப்புலனிழந்த பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். ஒருவர் சர்வகலாசாலையில் மேற்படிப்புக்குச் சென்றுள்ளார். விழிப்புலனிழந்தோர் அனைவரும் கல்வி பயின்று முழுமையான வாழ்க்கையை வாழவேண்டுமென்பதே எமது விருப்பம். இந்த விருப்பம் பூர்த்திபெற பெற்றோரும், சமுதாயமும் ஒத்துழைக்கவேண்டியது அத்தியாவசியமாகும்.

---

## எமது இலக்கிலிருந்து நாம் சற்றும் விலகமாட்டோம்

### சங்கானையில் யாழ். எம். பி.

[பண்டத்தரிப்பு]

""நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் மக்கள் வங்கி பெரும் பங்கை வகிக்கின்றது. மக்களின் வாழ்வு செழிக்கபொருளாதாரவிருத்தி இன்றியமையாதது. வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமைந்துள்ள சங்கானை மக்கள் வங்கி இப்பகுதிமக்களின் பொருளாதார வளர்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் தன்னலமற்ற சேவை செய்துவருகிறது என்பது கண்கூடு''.

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி எம். பி. திரு. திருநாவுக்கரசு தெரிவித்தார்.

சங்கானை மக்கள் வங்கியில் நடைபெற்ற சரஸ்வதிபூஜையின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் திரு. திருநாவுக்கரசு மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

நாட்டை அபிவிருத்தி செய்யும் பணியில் மக்கள் கடமை, கட்டுப்பாடு, நேர்மை நிதானம் தவறாது உழைக்க உறுதி பூணவேண்டும். இந்த ரீதியில் சங்கானை மக்கள் வங்கி ஊழியர்களும் முகாமையாளரும் மக்களின் அபிவிருத்திக்கு வழிகாட்டிகளாகத் திகழ்ந்து அபிவிருத்திக்கான தேவைக்கேற்ப கடன் உதவி வசதியையும்ஆலோசனைகளையும் வழங்கி வருகின்றனர்.

தாம் சுகயீனமுற்றிருந்த போது வட்டுத் தொகுதியின் சேவைகளைக் கவனித்துவந்த யாழ் எம். பி. திரு. யோகேஸ்வரனையும் திரு. திருநாவுக்கரசு பாராட்டிப் பேசினார்.

யாழ்ப்பாணம் எம் பியின் பாரியார் திருமதி யோகேஸ்வரன் மங்களவிளக்கேற்றி வைத்து ஆரம்பித்த இவ் வாணிவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசிய திரு. வி. யோகேஸ்வரன் கூறியதாவது:

### யோகேஸ் உரை

ஈழவளநாட்டின் அபிவிருத்திக்கு தலையாயசேவை செய்யவேண்டிய கட்டம் இன்று மக்கள்வங்கிக்குஏற்பட்டுள்ளது. மக்களின் சுபீட்சவாழ்வுக்கு இவ் வங்கிகள் அரிய சேவை செய்து வறுமையை அகற்றி அவர்களின் வாழ்க்கையை வளம்படுத்த வேண்டும்.

இன்று நாம் ஒரு நெருக்கடியான காலகட்டத்தில் இருக்கிறோம். இன்றைய இளம் சமுதாயத்தினரின் அபிலாஷைகளை, எண்ணக் குறிக்கோள்களையும் முன்வைத்தே நாம் கருமமாற்ற வேண்டி உள்ளது.

மக்கள் எம்மை எந்த நோக்கோடு தெரிவு செய்தார்களோ அந்த இலக்கிலிருந்து நாம் என்றும் விலக மாட்டோம் என இப் புனித நன்னாளில் உறுதி கூறுகிறேன்.

### முகாமையாளர் கருத்து

பிரதம விருந்தினரையும் சிறப்பு விருந்தினர்களையும் வரவேற்றுப் பேசிய மக்கள் வங்கி முகாமையாளர் திரு. பொ. கதிர்வேலாயுதபிள்ளை நாட்டு மக்கள் பொருளாதார சுபீட்சம் பெற்று சிறந்த வாழ்வு பெற வேண்டும் என்ற அவாவோடு மக்கள் வங்கிகள் சேவையாற்றி வருகின்றன. வட்டுக்கோட்டை எம். பியும் மக்களின் தேவைக்கென தம்மை அர்ப்பணித்துள்ளார். இது இப்பகுதி மக்களுக்குக் கிடைத்த அதிர்ஷ்டமாகும் என்று கூறினார்.

வங்கியின் அபிவிருத்தி உத்தியோகத்தர் திரு. இ. புவனேஸ்வரனும் உரையாற்றினார். கொற்றை கிருஷ்ணானந்தன் நன்றிகூறினார் (இ)

---

## பொருட்கள் மீட்கப்பட்டன!

### மூவர் கைது

(கிளிநொச்சி)

பூநகரிப் பகுதியில், பெரும் பரபரப்பூட்டியகடை உடைப்புக்களவு சம்பந்தமான சகல பொருட்களையும் கிளிநொச்சிப் பொலிஸார் மீட்டுள்ளனர்!

ஒரு மாதத்திற்கு முன்னர் பூநகரியில், தம்பிராய் என்னுமிடத்தில் கடையொன்று உடைக்கப்பட்டு, 4,500 ரூபா பெறுமதியான பொருட்கள் களவாடப்பட்டன. இக்களவு தொடர்பாகக் கிளிநொச்சிப் பொலிஸ் குற்றத்தடுப்புப் புலன்விசாரணைப் பகுதிச் சார்ஜன்ட் கே. நடராசலிங்கம் தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டி, திருட்டுப்போன பொருட்களைப் பூநகரியிலும், குரும்பசிட்டியிலும் வைத்து மீட்டனர். இக்களவு தொடர்பாகப் பூநகரியைச் சேர்ந்த எம். கணேசமூர்த்தி, எஸ். செல்வநாயகம், குரும்பசிட்டியைச் சேர்ந்த எஸ். நித்தியானந்தன் ஆகியோர் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டுக் கிளிநொச்சி நீதவான் கோர்ட்டில் ஆஜர்செய்யப்பட்டபோது, சந்தேகநபர்களை இம்மாதம் 20ந் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறும் உத்தரவிடப்பட்டது.

---

## இடமாற்றம்

[கிளிநொச்சி]

கிளிநொச்சி இ. போ. ச. டிப்போவில் சாலை அத்தியட்சகராகக் கடமையாற்றிய திரு. கே. பராக்கிரமராஜா காரைநகர் டிப்போவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார் வவுனியாசாலை அத்தியட்சகராகக் கடமையாற்றிய திரு ஸ்ரீஸ்கந்தராஜா கிளிநொச்சிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

---

மின்னொளியில்

## கரபந்தாட்டப் போட்டி

[யாழ்ப்பாணம்]

குளமன்கால் சென்சேவியர் விளையாட்டுக்கழகம் கரபந்தாட்டச்சுற்றுப் போட்டியினை மின்னொளியில் நடாத்தி வருகிறது. ஓவர்கேம் செற் அப் முறைகளில் நடாத்தப்படும் இப்போட்டிகளின் இறுதிப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவிருக்கின்றன. 40 கழகங்கள் பங்குபற்றுவதினால் தினமும் ஏழுக்கு மேற்பட்ட போட்டிகள் நடத்தப்படுவது குறிப்பிடதக்கது.

நிர்வேலி ஸ்ரார் வி. கழகத்துக்கும் தெல்லிப்பளை ஸ்ரார் வி. கழகத்துக்கும் புதனன்று நடைபெற்றபோட்டியில் ஸ்ரார் வெற்றிபெற்றுள்ளது. காங்கேசன்துறை ஐக்கிய வி. கழகத்தை எதிர்த்து விளையாடிய மற்றுமொரு போட்டியில் உடுப்பிட்டி சிவகுமாரன் கழகம் வெற்றி பெற்றுள்ளது. ஸ்ரார் வி.கழகத்திற்கும் சிவகுமாரன் கழகத்திற்கும் நடந்த போட்டியில் ஸ்ரார் வெற்றி பெற்றுள்ளது. இப்போட்டிகளுக்கு மத்தியஸ்தராக திரு. எம். ஜெகநாதன் கடமையாற்றினார். (ஈ)

**நாகம்ஸ்**
(சுன்னாகம்)
தினசரி 2-45, 6-45, 10-00
முத்துராமன்-ஸ்ரீவித்யா
காலங்களில் அவள்
வசந்தம்

**வெலிங்டன்**
(சாவிப்பாசி)
தினசரி 6-30, 9-30
சிவகுமார்-ஜெய்சித்திரா
தங்கத்திலேவைரம்

**Rio** (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
Susan George
All Neat in
BLACK
STOCKINGS

**மனோகரா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எஸ். எஸ். ஆர். விஜயகுமாரி
நடித்த
பூம்புகார் (புதிய பிரதி)

**வின்ஸர்** போன்: 466 தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
ஜெமினி - தேவிகா
நடித்த
வாழ்க்கைப்படகு
[புதிய பிரதி]

போன்: 7642.
**சாந்தி** தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
(யாழ்ப்பாணம்) முத்துராமன், ராஜ்ஸ்ரீ, மனோகர்,
அனுபவம் புதுமை
மர்மம் ஹாஸ்யம் புதிய பிரதி

**வெலிங்டன்** (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ஆலயமணி
(புதியபிரதி)

**லிடோ** போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
(யாழ். நகர்)
மருதநாட்டுவீரன்

**ஸ்ரீதர்** தினசரி 10-15, 2-15, 6-15 & 9-45
(யாழ்ப்பாணம்)
சிவாஜி ... சாவித்திரி ... பாலையா
சந்திரபாபு ... தங்கவேலு நடித்த
காத்தவராயன் (புத்தம்புதியபிரதி)

**REGAL** Phone: 360
Daily 4-30, 7-00, & 9-30 P. m.
(Jaffna)
Richard Harris in
20th Century Fox Present
BLOOMFIELD
(colour)

தினசரி 4 காட்சிகள் 151 வது வெற்றித்திருநாள்
**ராணி**
(யாழ். நகர்)
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

தினசரி: 10-30, 2-30, 6-30, 9-45
**ராஜா** ஃ மரிக்கார் ராமதாஸ்
(யாழ். நகர்) ஃ ஹெலன்குமாரி
செல்வசேகரன்-சிவராம் - ஜவாகர்-ராஜகோபால்
மற்றும்பலர் நடித்த சிறந்த ஹாஸ்ய திரைவிருந்து!
ஏமாளிகள்

## 'சாதிப்பாகுபாடு காட்டாதீர்'

### சிகை அலங்கரிப்பாளர் சங்கம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

'தமிழர்கள் மத்தியில் சமூகக் குறைபாடுகளை நீக்குவதில் சிகை அலங்கரிப்பாளர்கள் முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டும். இன்னும் பல இடங்களில் சிறுபான்மைத் தமிழரென்று சொல்லப்படுபவர்களாகிய நம் மத்தியிலேயே தொழில் செய்வதில் சமூகங்களுக்கிடையில் பாகுபாடுகள் காட்டப்பட்டு வருகின்றன எனக் கூறப்படுகிறது. இந்தநிலை நீக்கப்பட வேண்டும்'

இவ்வாறு வட இலங்கை சிகை அலங்கரிப்பாளர் சங்கத் தலைவர் திரு. அ. ஞானப்பிரகாச டாஸ் சிகை அலங்கரிப்பாளர்களுக்கு விடுத்திருக்கும் வேண்டு கோளில் தெரிவித்து இருக்கிறார். (அ)

## வேண்டுவன...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

கும் வழக்கம் பற்றி சங்க இலக்கியங்களில்சொல்லப்படுகிறது. அத்தோடு இதுபோன்ற ஈமத்தாழிகள் பழம்பெரும் தமிழகத்தின் பகுதிகளான ஆதிச்சநல்லூர், திருவிதாங்கோட்டுப் பகுதிகளிலும் மற்றும் மிகத் தொன்மையான திராவிடர்களின் ஆரம்பகால இருப்பிட நகரங்களான 'மொகஞ்சதார' 'ஹொரப்பா' போன்ற சிந்து நதிப்பள்ளத்தாக்கு நகரங்களிலும் பெருமளவில் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

### பழமை வாய்ந்தது

வரலாற்று ஆசிரியர்களின் ஆய்வுகள் எப்படியிருந்தபோதிலும் இந்த வல்லிபுர ஆழ்வார் ஆலயம் 2000 வருடங்கள் பழமைவாய்ந்தது என்பதை மறுக்கமுடியாது, இடைக்காலத்தில் சிங்கை நகரத்து அரசர்களின் அரவணைப்பால் சீரும் சிறப்பும் கீர்த்தியும் பெற்றிருந்த இவ்வாலயம், சிங்கை நகரின் வீழ்ச்சிக்குப் பிறகு பல ஆண்டுகள் பொலிவிழந்து புகழ்மங்கிக்கிடந்தது. இக்கால கட்டடத்தில் அன்னியர் ஆட்சியாலும் சில தனியாரது ஆதிக்கத்தாலும் சிதைவுற்றுப்போன இவ்வாலயத்திற்குரிய சாசனங்களோ-பட்டயங்களோ - பூர்வீகப் பொருட்களோ எதுவும் இன்று கிடைக்கப்பெறவில்லை. ஆனாலும் இன்று பொதுமக்களின் முயற்சியால் இவ்வாலயம் தனியாரிடமிருந்து ஒரு பரிபாலன சபையின் கைக்கு மாற்றப்பட்டுவிட்டது. கடந்த ஆண்டு இந்தப் பரிபாலன சபையினர் ஆலயத்தைஉடனடியாகப் புனருத்தாரணம்செய்து கும்பாபிஷேகமும் செய்தார்கள். கூடியவிரைவில் கிருஷ்ண பக்தர்களின் உதவியோடு அவர்கள்இவ்வாலயத்திற்குரிய இராஜகோபுரத்தைக் கட்டியெழுப்பவும் திட்டமிட்டுள்ளார்கள்.

### இன்று தேர்

அவதாரச் சிறப்பும் வரலாற்று முக்கியத்துவமும் வாய்ந்த இவ்வாலயத்தில் கடந்த 30-9-78 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிய மகோற்சவ திருவிழாக்கள் சிறப்புற நடைபெற்று இன்றைய தினம் சித்திரத் தேரிலே வீதிவலம் வருகின்ற காட்சியைக் காண்பதற்காக நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து பக்தர்கள் எல்லாம் வந்து குவிந்த வண்ணம் இருக்கின்றார்கள்.

### கண்கொள்ளாக் காட்சி

நாளையதினம் வங்கக்கடலோரத்திலே நடைபெறஇருக்கின்ற சமுத்திரத் தீர்த்தமானது உண்மையிலேயேஒருகண்கொள்ளாக் காட்சியாகும். மாலை மயங்கும் நேரத்திலே எம்பிரான் கருடவாகனத்தின் மீதமர்ந்து ஆலயத்திலிருந்து இரண்டுமைல்தொலைவிலுள்ள வங்கக் கடலை நோக்கி அனுமார் முன்செல்லஆடியசைந்து புறப்பட, அவரை சூழ எங்கும் பக்தர்கள் அணியணியாக, திரள்திரளாக, கூட்டங்கூட்டமாக சிறுவர் சிறுமியர்- ஆண்கள்-பெண்கள், முதியவர்கள் கூட அணிவகுத்து மணல்மேடுகளிலும்- குன்றுகளிலும்- பள்ளங்களிலும் ஏறியும், இறங்கியும் செல்கின்ற இந்தக் காட்சியை எழுத்தில் இலகுவில் வர்ணிக்கமுடியாது. சாதாரண நாட்களிலேயே அமைதி உறங்கும் வங்கக்கடல் இந்த தீர்த்த உற்சவத்திலன்று ஆர்ப்பரித்துக்கொண்டிருக்கும். இத்தினத்தில் சிறுவர்களும், பெரியோர்களும் கடலில் இறங்கி நீராடி மகிழ்வார்கள். அது மட்டுமல்ல எம்பிரான் ஸ்ரீமந நாராயணன் தீர்த்தமாடும் நேரம் தங்கள் பாவபாதங்களை புனிததீர்த்தத்தில் படவைத்து தங்களை புண்ணியஸ்தர்களாக்கும் பாக்கியம் எல்லா மாணிடர்க்கும் கிடைக்காத ஒன்று.

நலந்தரும் சொல்லை நான்
கண்டுகொண்டேன்
நாராயணா என்னும் நாமம்.

## "சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்களிக்கவும்"

(மாவிட்டபுரம்)

தமிழ்பேசும் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்கள் தமிழ் பேசும் மக்களிடையே கடமை புரிவதால், அவர்களுக்கு சிங்களத்தேர்ச்சி தேவையற்றது. தமிழ்ப் பகுதிகளில் கடமையாற்றுவதற்காக சேர்க்கப்பட்ட இவர்களுக்கு, ஆரம்பத்தில் சிங்களத் தேர்ச்சி நிபந்தனையை விதிக்காது இடையிலே அதைப்புகுத்தி அவர்களை வேலைநீக்கம் செய்வது மனிதாபிமானமற்றது. வடக்கு, கிழக்கில் கடமை புரியும் ஆசிரியர்களுக்கு சிங்களத் தேர்ச்சி தேவையில்லையாதலால் இவர்களுக்கும் அதேபோன்று சிங்களத் தேர்ச்சியிலிருந்து விதிவிலக்களிக்கவேண்டும்.

இவ்வாறு வடமாகாண விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் சங்கம் ஜனாதிபதி, பிரதமர், விவசாய அமைச்சர் மற்றும் பல்வேறு உயர் அதிகாரிகளுக்கும் மகஜர்கள் அனுப்பியுள்ளது.

இம்மகஜரில் மேலும் சிங்களத் தேர்ச்சியின்மையால் 35 விவசாய விஸ்தரிப்புச் சேவையாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு இடையிலே சிங்களத்தைப் புகுத்தி வேலை நிரந்தரம், சம்பள உயர்வு பதவி உயர்வு என்பவற்றை தடுத்துவைத்து, தற்போது ஒய்வூதியம் கூட இல்லாமல் வேலைநீக்கம் செய்துள்ளது வருந்தத்தக்க செயலாகும் 20 வருடங்களாக சேவை புரிந்தவர்களும் 50 வயதிற்கு மேற்பட்டவர்களும் இதில் வேலைநீக்கம் செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் தமது குடும்பத்தை நடத்தமுடியாது கஷ்டமுறுகிறார்கள். அரசு இதுவிடயத்தில் கவனமெடுக்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (ஈ)

## இன்றைய இராசிப்பலன்

புரட்டாதி மாதம் 28-ந் திகதி
சனிக்கிழமை

[14-10-78]

**மேடம்:-** நேர்முகப் பரீட்சைக்கு உகந்த தினம். தனத்துடன் வாழ்வு இன்று கிடைக்கும். நீண்டநாள் கடன் நிவர்த்தியாவதற்கும் இடமுண்டு.

**இடபம்:-** பெருமையின் நிழல் உங்களைத் தொடரும். உதவி செய்யப்போய் உபத்திரத்தைத் தேடிக் கொள்ளுவீர்கள். அரசபயத்திற்கு இடமேற்படுமாகையால் வழக்கு விவகாரங்களில் ஈடுபடாதிருக்கவும்.

**மிதுனம்:-** விலை பொருள் விருத்தியுடன் விருந்திற்கும் இடமுண்டு. தாய்வழித் தனமும் தாராளமாகக் கிடைக்கும். எதிர்கால வாழ்வுக்கான புதிய திட்டத்தை உருவாக்குவீர்கள். சிறப்பான தினம்.

**கடகம்:** உள்ளம் இன்பத்தால் துள்ளும். நீண்டநாள் பிணி நிவர்த்தியாவதற்கும் இடமுண்டு.

**சிங்கம்:-** கௌரவத்தைப் பாதிக்கக் கூடிய சம்பவம் இடம் பெறலாம். தூற்றலைத் தொடுப்பதற்கு எதிரிகள் முனைவர். பெரியவர் ஒருவருடன் பகைத்துக் கொள்ள நேரிடும். முன்யோசனை நன்று.

**கன்னி:-** வாழ்க்கையில் தென்றல் வீசும். முதியவர்கள் உங்களுக்கு உதவுவதற்கு முன்வருவார்கள். குழந்தை ஒன்றின் முன்னேற்றம் மகிழ்ச்சியைத் தரும். தெய்வத்தின் துணையுமுண்டு;

**துலாம்:-** சூழ்ச்சி வலையின்னும் அடுத்துக் கெடுப்பவர் அருகிலேயே இருப்பர். சகோதர வழியால் சஞ்சலமான சம்பவம் இடம்பெறும் கடன்பட நேரிடும். மனஅடக்கம் நன்று.

**விருச்சிகம்:-** நினைவுகளின் மத்தியில் இன்று வாழ்க்கையை நடத்துவீர்கள். கண்ணியமான உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடப்படலாம். நண்பர்கள் மூலம் விருந்தும் உண்டு.

**தனுசு:-** பயன் தரும் பயணம் இன்று மேற்கொள்ளப்படலாம். பழைய நினைவுகள் தலைதூக்கும், வார்த்தையில் வசீகரமும்வாழ்க்கையில் சுவையான நிகழ்ச்சிகளும் இடம் பெறும்,

**மகரம்:-** வாழ்க்கை இன்று மல்லிகைத் தோட்டம்போல் மணம்பரப்பிக் கொண்டிருக்கும். காதல் சிட்டுகளுக்கு இன்று கவர்ச்சிகரமானதினம். பெரியோர்கள் ஆதரவும் கிடைக்கும்.

**கும்பம்:-** செய் தொழிலில் தடுமாற்ற நிலை தென்படும். வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிடும். குடும்பத்தில் சிறுபிணி தோன்றும். மனத்திடம் விரும்பத்தக்கது. விந்தையான போக்கு வேடிக்கைக்காட்டும்.

**மீனம்:-** இன்று கைவிட்டுப் போன பொருள் மீண்டும் வந்து சேர முடியாது. போக்கு வரத்துக்களில் அதிக கவனம் செலுத்தவும், முதியவர் ஒருவரின் முணுமுணுப்பு குடும்பத்தில் குமைச்சலை அதிகரிக்கும். அமைதிநன்று.

சோதிடக்கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

## இன்று வல்லிபுரத்தில் அன்னதானம்

(புலோலி)

இன்று காலை 8 மணிக்கு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் தேர்த்திருவிழா நடைபெறுகிறது.

பகல் 12 மணிக்கு அமரர் ஜி. ஜி. பொன்னம்பலம் நினைவாக அன்னதானம் வழங்கப்பட இருப்பதாக உபயகாரர் திரு. ப. நா. கிருஷ்ணகுமார் தெரிவித்தார். [அ]

## இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி பிரதம எழுதுவினைஞராயிருந்த திரு. த. பூபாலசிங்கம் ஆஸ்பத்திரிச்செயலாளராகப் பதவி உயர்வுடன் கொழும்பு முல்லேரியா ஆஸ்பத்திரிக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுவிளார். [அ]

## வலி. கிழக்கு ச. ச. நி. சமாஜ விளையாட்டுப்போட்டி

[யாழ்ப்பாணம்]

வலி- கிழக்கு சனசமூக நிலையங்களின் சமாஜம் சனசமூக நிலையங்களுக்கிடையே விளையாட்டுப் போட்டியொன்றை நடாத்தவுள்ளது.

ஆண்கள் பெண்கள் அஞ்சல் ஓட்டப்போட்டிகளும் தடையோட்டப்போட்டிகளும் சைக்கிள் ஓட்டப்போட்டிகளும் ஆண்களுக்கான உயரம்பாய் தல்நீளம் பாய்தல் போட்டிகளும் மரதன் ஓட்டப்போட்டியும் கரபந்தாட்டப்போட்டியும் மாட்டுவண்டிச் சவாரி போட்டி உட்படமற்றும் பல விளையாட்டுகள் இடம் பெறவுள்ளன. [உள- அ]

# யாழ்ப்பாணம் முல்லைத்தீவு மாவட்ட அமைச்சர் பதவி: ஜெயக்கொடி கருத்து

(யாழ்ப்பாணம்)

''முக்கிய மாவட்டங்களான திருகோணமலை வவனியா மாவட்டங்களுக்குச் சிங்கள மாவட்ட மந்திரிகள் நியமிக்கப்பட்டிருக்கும் போது, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களைக் கூட்டணியினர் ஏற்க வேண்டுமா?''

முன்னாள் உடுப்பிட்டி எம். பி.யும், தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகருமான சட்டத்தரணி கே. ஜெயக்கொடி விடுத்திருக்கும் அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:

''தேர்தலுக்குப் பின் தமிழ் ஈழம் அமைக்க, கூட்டணியினர் தீவிரமாக முயற்சிப்பார்களென மக்கள் எதிர்பார்த்தனர்.

### தமிழ் ஈழத்திற்கு அத்திபாரம்...

''77, ஆகஸ்டில் நடந்த இனக் கலவரம், தமிழ் ஈழம் அமைக்க அத்திபாரமிடக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாகும். கூட்டணியினர் அதையும் பயன்படுத்தவில்லை.

''அரசுடன் கூட்டணியினர் ஒட்டி உறவாடியபோது தமிழ் ஈழம் அமைக்க உதவும் ஆக்கபூர்வமான முக்கிய வேலைகளை நடைமுறைப்படுத்தவில்லை. பொத்துவிலிலிருந்து கரையோரமாகக் காங்கேசன்துறை வரையில் பாதை. மன்னாரையும் யாழ்ப்பாணத்தையும் இணைக்கும் மகாதேவாப் பாலம், முல்லைத்தீவையும் திருமலையையும் இணைக்கும் பாதை. காங்கேசன்துறைத் துறைமுகம், வல்லிபுரக் கண்ணாடித் தொழிற்சாலை, காணியற்றோருக்கு அரச காணி பெறுதல்போன்ற செயல்திட்டங்களைக் கூட்டணியினர் அமுல்படுத்தியிருக்கலாம். இதையும் கூட்டணி தவறவிட்டது.

### ஐ. தே. கட்சியுடன் ஒத்துழைத்து எதுவும் பெறமுடியாது

''வட்டமேசை மாநாடு கூட்ட விரும்பாத, பண்டா-செல்வா ஒப்பந்தத்தை அரசியலமைப்பில் சேர்க்க விரும்பாத, தமிழரின் சுயநிர்ணய உரிமையை ஏற்காத, செல்வா-டட்லி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தாத ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஒத்துழைத்துச் சாதிக்கக்கூடியது எதுவுமில்லை.

''பேச்சு வார்த்தையினால் தமிழ்ப் பிரதேசத்தைப் பாதுகாக்கமுடியாது. வடக்கே சிங்களவரையும், தெற்கே தமிழரையும் குடியேற்றத் திட்டமிட்ட ஜனாதிபதியுடன் எப்படிப் பேச்சுவார்த்தை நடத்தமுடியும்?

''உருப்படியான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு உகந்த நேரம், இதுவல்ல என எண்ணினால், மகாத்மா காந்தியின் ஒத்துழையாமை, பகிஷ்கரிப்பு இயக்கங்களை நடத்தலாம்.

''அரசியல் சாசனத்தை எதிர்க்கும் அதேநேரத்தில், அதற்கு விசுவாசம் தெரிவித்துச் சத்தியப்பிரமாணஞ் செய்யலாமா? தமிழரின் சுயநிர்ணய உரிமையை மறுக்கும் பாராளுமன்றத்தில் சம்பிரதாயத்தைக் கடைப்பிடித்து நடக்க ஒத்துழைக்க வேண்டுமா?

''(எதிர்ப்பு இயக்கத்தைக் கைவிடவேண்டாமெனக் கூட்டணித் தலைமைப்பீடத்தைக் கேட்டுக்கொள்கிறேன்' (க-இ)

---

# விழிப்புலனிழந்தோரின் கண்காட்சி, கலைவிழா இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். லயன்ஸ் கழகத்தின் ஆதரவில் இலங்கை விழிப்புலனிழந்தோர் சம்மேளனமும். விழிப்புலனிழந்தோர் சமூகமும் சேர்ந்து நடாத்தும் கண்காட்சியும் அகில உலக வெள்ளைப்பிரம்பு பாதுகாப்பு தினமும் இன்று காலை 9 மணி முதல் மாலைவரை யாழ். மத்திய கல்லூரியிலும், யாழ். திறந்தவெளி அரங்கிலும்நடைபெறும்.

இவ்வைபவத்தில் யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ பிரதமவிருந்தினராக் கலந்துகொள்வார்.

யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறும் கண்காட்சியில் விழிப்புலனிழந்த மக்கள் பாவிக்கும் கருவிகள், அவர்களது கைப்பணிப்பொருட்கள் காட்சிக்கு வைப்பதுடன், வேலை செய்யும் முறைகளும் பார்வையாளர்களுக்கு எடுத்து விளக்கப்படும்.

மாலை 4 மணிக்கு ராஜா தியேட்டரிலிருந்து ஆரம்பமாகும் விழிப்புலனிழந்தோரின் வெள்ளைப்பிரம்பு தாங்கிய அணிவகுப்பு வெலிங்டன் சந்தி வழியாக பஸ்நிலையத்தை வந்தடைந்து அங்கிருந்து திறந்த வெளியரங்கை அடையும்.

மாலை 6 மணிக்கு விழிப்புலனிழந்தோரின் கலைவிழா திறந்தவெளி அரங்கில் யாழ். அரசாங்க அதிபர் திரு. லயனல் பெர்னாண்டோ தலைமையில் நடைபெறும். [கெ-இ]

---

## இ. வி. தமிழ் அதிபர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வித்தியாலயத் தமிழ் அதிபர் சங்க நல்லூர்க் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்;

தலைவர்: திரு. ந. பசுபதிப்பிள்ளை, துணைத் தலைவர்: திரு, த. இராசேந்திரம், செயலாளர்: திரு. நா. சோதிலிங்கம், துணைச் செயலாளர்: திருமதி ப. சின்னராஜா. பொருளாளர்: திரு. பொ. நடராஜா, நிர்வாகசபை உறுப்பினர்களாக திரு ச. கைலாசபிள்ளை, திருமதி ஜே. தவராசா, திரு. ஆ. குருசாமி திரு. அ. கந்தையா, திரு. க. மாணிக்கவாசகர், திரு. ச. பொன்னம்பலம் ஆகியோரும் கௌரவ கணக்குப் பரிசோதகராக திரு. நா. கந்தையாவும் தெரிவாகினர். (உ)

---

## யாழ்ப்பாண அரசு' நூல்வெளியீடு இன்று

[யாழ்ப்பாணம்[

கலாநிதி சி. பத்மநாதன் எழுதிய யாழ்ப்பாண அரசு (கிங்டம் ஒப் ஜப்னா) என்ற ஆங்கில வரலாற்று நூல் வெளியீட்டுவிழா இன்றுமாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

விழாவிற்கு யாழ். வளாகத் தலைவர் பேராசிரியர் சு. வித்தியானந்தன் தலைமை வகிப்பார். ஆய்வுரைகளை திருவாளர்கள் மு சிவசிதம்பரம், சி. கதிரவேலுப்பிள்ளை, பண்டிதர் கா. பொ. இரத்தினம், வெ. யோகேஸ்வரன் ஆகியோர் வழங்குவார்கள்.

இன்று நடைபெறவிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் வாராந்தக் கருத்தரங்கு நூல்வெளியீட்டு விழாவையொட்டி நாளை மாலை நடைபெற ஏற்பாடாகியுள்ளது. இன்றைய அரசியல் நிலைபற்றி திரு வெ. யோகேஸ்வரன், சமவேந்தன் ஆகியோர் உரையாற்றுவர்.

---

## தமிழ் ஈழம்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சம்: தமிழ் ஈழம் அமைத்த பின்னரே அதுபற்றித் தீர்மானிப்போம்.

### தமிழ்மக்களுக்கு இன்று கராட்டி அவசியம்

சட்: உமக்கு கராட்டி தெரியுமா? சம்: எனக்குக் கராட்டி தெரியாது.

ஆனால் இன்றைய காலகட்டத்தில் தமிழ்மக்கள் சகலருமே 'கராட்டி' கற்றிருக்க வேண்டியது அவசியமாகவுள்ளது. (ம-இ)

---

## யாழ். ரயில்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

சம்பந்தப்பட்ட மாணவி, யாழ். சிங்கள மகாவித்தியாலயத்தில் கல்விகற்றுவிட்டு வீடு செல்வதற்காக புகையிரதநிலையத்தில் நின்றாராம், இவர் தனிமையில் நிற்கும்போது இரு இளைஞர்கள் மாணவியின் கையைப்பிடித்து தூக்கிச் செல்ல முயன்றனராம், மாணவி இளைஞர்களின் செயலைக்கண்டு அவலக்குரல் எழுப்பவே பொதுமக்கள் இரு இளைஞர்களையும் தாக்கி, மாணவியை மீட்டதுடன் பொலிசிலும் ஒப்படைத்தனர்.

யோசெப் எட்மன், ராசையா திலகராஜா ஆகிய இளைஞர்களே பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளனர், [கெ-இ]

---

## அடையாள...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கண்டவாறு சட்டத்தரணி ஆர்.ஜே. செல்வரத்தினம் வாதாடியதையடுத்து நீதவான் திரு.எஸ்.ஆனந்தகுமாரசாமிஇம்மாதம் 18ம் திகதிஇச் சந்தேக நபரை அடையாள அணிவகுப்புக்குட்படுத்துமாறும், சந்தேக நபரை மீண்டும் சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்துமாறும், 18ம் திகதிக்கிடையில் சந்தேக நபர்மீதான குற்றச்சாட்டுகள் குறித்து சாட்சியங்களை தம்முன் சமர்ப்பிக்குமாறும் உத்தரவிட்டார்.

சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினத்துடன் சட்டத்தரணிகள் எஸ். சிவபாக்கியநாதன், எஸ். புண்ணியமூர்த்தி, மு. திருநாவுக்கரசு, கே. விநோதன் ஆகியோரும் ஆஜராகினர். சங்கானைப் பொலிசைச் சேர்ந்த சண்முகநாதன் வழக்கை நடத்தினர்.

---

இந்திய, பாக்., பிலிப்பைன்ஸ்

# டாக்டர்கள் இலங்கையில் சேவை!

(கொழும்பு)

இந்தியா, பாகிஸ்தான், பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து 3 வருட ஒப்பந்த அடிப்படையில் 150 டாக்டர்கள் இலங்கையின் கிராமப்புறங்களில் வேலைக்கு அமர்த்தப்படவுள்ளனர். இவர்களில் 50 டாக்டர்கள் அடுத்த மாதம் இங்கு வருகின்றனர்.

இத்தகவலைச் சுகாதார அமைச்சின் செயலாளர் திரு. பி. சி, பெரேரா தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சுகாதார சேவைகள் அதிபர் டாக்டர் எச். ஏ. ஜேசுதாசனும் இப்பத்திரிகையாளர் மகாநாட்டில் கலந்துகொண்டார்

இலங்கையிலிருந்து வருடாந்தம் 50 டாக்டர்கள் வெளிநாடுகளுக்குச் செல்கின்றனர் என்றும் டாக்டர்களின் தட்டுப்பாட்டைச் சமாளிக்க தற்போது சேவையாற்றும் 345 உதவி வைத்திய உத்தியோகத்தர்களுடன் மேலும் 100 பேர் நியமனம்பெற உள்ளனர் என்றும் அவர் கூறினார். (ம-இ)

---

## சுவீப் முடிவுகள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 07 D 0904 | 07 D 0952 |
| 14 D 0742 | 24 D 0636 |
| 02 E 0101 | 09 E 0583 |
| 13 E 0280 | 22 E 0833 |
| 29 E 0576 | 22 F 0074 |
| 27 F 0284 | 06 G 0324 |
| 16 G 0293 | 20 G 0961 |
| 01 H 0367 | 02 J 0984 |
| 25 J 0219 | 23 J 0479 |
| 11 K 0653 | 17 K 0409 |
| 18 K 0196 | 18 K 0851 |
| 24 K 0556 | 09 L 0136 |
| 12 L 0359 | 23 L 0641 |
| 27 L 0172 | 14 M 0609 |
| 21 M 0892 | 28 M 0269 |
| 01 N 0171 | 01 N 0277 |
| 14 N 0777 | 15 N 0693 |
| 18 N 0543 | 28 N 0351 |
| 18 O 0751 | 23 O 0756 |
| 25 O 0878 | 27 O 0374 |
| 27 O 0851 | 29 O 0777 |
| 02 P 0693 | 19 P 0482 |
| 20 P 0680 | 03 Q 0800 |
| 06 Q 0662 | 07 Q 0832 |
| 13 Q 0327 | 26 Q 0750 |
| 27 Q 0134 | 30 Q 0930 |
| 01 R 0102 | 08 R 0136 |
| 08 R 0145 | 23 R 0412 |
| 18 R 0214 | 24 R 0629 |
| 28 R 0860 | 06 S 0125 |
| 08 S 0139 | 09 S 0187 |
| 16 S 0305 | 16 S 0505 |
| 22 S 0546 | 01 U 0460 |
| 07 U 0062 | 16 U 0653 |
| 22 U 0772 | 01 W 0538 |
| 05 W 0346 | 07 W 0915 |
| 23 W 0849 | 26 W 0178 |
| 11 X 0070 | 12 X 0046 |
| 14 X 0482 | 18 X 0078 |
| 26 X 0222 | 26 X 0961 |
| 27 Y 0788 | 01 Z 0076 |
| 09 Z 0322 | 12 Z 0998 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

---

## தொண்டமானுக்கு இ. இ, கலாசார சங்கம் வரவேற்பு

(கொழும்பு)

கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு. எஸ். தொண்டமானுக்கு இலங்கை இந்திய சமூக கலாசார ஸ்தாபனம் நாளை ஞாயிற்றுக்கிழமைபம்பலப்பிட்டியிலுள்ள புதுக்கதிரேசன் மண்டபத்தில் வரவேற்பளித்துக் கௌரவிக்கிறார்கள். அன்று மாலை 4 மணிக்கு நடைபெறும் இந்நிகழ்ச்சியில் திருமதி தொண்டமானும் கலந்துகொள்வார்.

---

## எண்ணைக் கப்பல் வெடித்தது! 57 பேர் பலி

சிங்கப்பூர் அக், 12

சிங்கப்பூரில் எண்ணைக் கப்பல் ஒன்று வெடித்து சிதறித் தீப்பற்றியதை அடுத்து 57 பேர் பலியாகினர் என்றும் 86 பேர் காயமடைந்துள்ளனரென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது, [இ]

---

## நினைவுநாள்

[யாழ்ப்பாணம்[

மகாஜனக்கல்லூரி முன்னாள் அதிபர் அமரர் ஜயரத்தினம் நினைவுநாள் நாளைக்காலை கல்லூரி மண்டபத்தில் கொண்டாடப்படவுள்ளது.

விழாவில் யாழ். கல்வித்திணைக்கள கணக்காய்வாளர் திரு. நா. திருநாவுக்கரசு பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். ]கெ-இ]

---

# 9 ஆண்டுகளுக்குப் பின்னர் கைபட்ட புத்தகம்!

]கோண்டாவில்]

யாழ்ப்பாணம் பல்தொழில்நுட்ப நிறுவன நூலகத்தின் இரவல் கொடுக்கும் பகுதியில் கடந்த 9 வருடங்களாக கைப்படாமல் இருந்த புத்தகங்களில் ஒன்று நேற்றுமுன்தினம் தான் மாணவரொருவரால் எடுக்கப்பட்டதாம்.

அந்நூலகத்திலுள்ள பல புத்தகங்கள் இன்னும் கைபடாதனவாகவே உள்ளன. பயிற்சி நெறிகளோடு சம்பந்தப்படாத பல புத்தகங்கள் அங்கு நிறைந்துள்ளபோதிலும் பயிற்சி நெறிக்குத் தேவையான தமிழ்ப் புத்தகங்கள் மிகக் குறைவாகவே உள்ளன, இதனால் தேவையான நூல்களைப் பெறமுடியாமல் மாணவர்கள் கஷ்டப்படுகின்றனர்.

---

## 2-வது ஏர்பூட்டு...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பாக உள்ள 65 ஏக்கர் நிலம் 2-வது ஏர்பூட்டுவிழாவுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மிகவும் எளிமையான முறையில் நடைபெறும் இவ்விழாவின் செலவினங்களை அனுராதபுர மக்கள் பொறுப்பேற்கின்றனர்.

[ம-இ]

---

# ரயிலில் 'ஓசி'ப் பயணம்: இருவருக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

ரயிலில் ஓசிப் பிரயாணம் செய்த இருவருக்கு சாவகச்சேரி நீதவான் ஐவன் பெர்னாண்டோ நேற்று தலா 30 ரூபா அபராதம் விதித்தார்.

எம். சி.காலிதீன், எம். எல். யூனைதீன் ஆகிய இருவரும் காங்கேசன்துறை - பளை [செ]ரயிலில் டிக்கட் இன்றிப்பிரயாணம் செய்ததாகக்குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

யாழ்ப்பாணம் புகையிரத பாதுகாவல் உத்தியோகத்தர் வி. ஆறுகமுகலிங்கம் வழக்கை தாக்கல் செய்திருந்தார். அபராதம் செலுத்தாவிடில், 1 மாதக் கடூழியச் சிறைத் தண்டனையென்றும் நீதவான் தெரிவித்தார். (க)

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
The Eelanaadu PostBox 49, Telegram Eelanaadu, Telephone 389 Registered a Newspapr in Srilanka